விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 24 வெள்ளிக்கிழமை (09.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 264

ராம்கோ
RAMCO CEMENT
சீமெந்து

### கட்டுநாயக்காவில் நேரடிப்பேச்சு

# நோர்வே அரசின் யோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்தனர்



(கிளிநொச்சியிலிருந்து ஐங்கரன்)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான நேரடிப்பேச்சுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடாத்துவது என்ற நோர்வேயின் யோசனையை தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர்.

நேற்று கிளிநொச்சியில் சந்தித்த நோர்வேக் குழுவினரிடம் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு உள்ளிட்ட அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் பேச்சுக்களைநடத்துவது சாத்தியமில்லை.

கிளிநொச்சி அல்லது வேறு ஏதேனும் ஒரு நடுநிலையான நாட்டில் பேச்சுக்கள் நடத்தலாம் என்று தெரிவித்திருக்கிறோம் என தமிழ்ச்செல்வன் கூறினார்.

போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்கின்றபோது தரித்துச்செல்வது என்பது வேறுபேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதென்பது வேறு.

முரண்பாடுகளுடைய இருதரப்புக்கள் ஒரு பேச்சுவார்த்தையை நடத்துகின்றபோது இயல்பான சூழலில் நடைபெறவேண்டும்.

அதன் அடிப்படையிலேயே எமது நிலைப்பாட்டை அதிகார பூர்வமாக விளக்கினோம் என்றார்.

*கருணா குழுவுடன் பேச்சு*

அண்மையில் கருணா குழுவை கண்காணிப்புக்குழு சந்தித்ததாகச் செய்திகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு



படம்: ஐங்கரன்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்களுக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வே தரப்பினருக்குமான முக்கிய சந்திப்பொன்று நேற்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூவ் ஹொக்லண்ட் இலங்கைக்கான நோர்வேயின் பிரதித்தூதுவர் மற்றும் அவர்களது அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர் மீது தாழங்குடாவில் கைக்குண்டுத் தாக்குதல்

### இருவர் பலி; 6பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-கல்முனை வீதி தாழங்குடாவில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சம்பவஇடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இனந்தெரியாத குழுவினர் நடத்திய இத்தாக்குதலில் மேலும் 2அதிரடிப்படை வீரர்களும் 4 பொலிஸ் வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். அவ்வழியாக சென்ற பொதுமகனொருவரும் காயமடைந்துள்ளார்.

தமது சுற்றுக்காவல் நடவடிக்கைகளை மாலை 4 மணியளவில் முடித்துக் கொண்டு மண்முனை முகாமுக்கு வழமைபோல் கால்நடையாக திரும்பிக்கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களே இத்தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-8)

## விமானத்தில் குண்டுப்புரளி நெரிசலில் சிக்கி பெண் பலி

### 90 பேர் படுகாயம்

(கொழும்பு)

சவுதி அரேபியத் தலைநகரான ரியாத்தை நோக்கி கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்திலிருந்து புறப்படவிருந்த பொயிங்-747 என்ற விமானத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக நேற்று புரளி கிளப்பப்பட்டது.

பொய்யாக கிடைக்கப்பட்ட தொலைபேசி தகவலையடுத்து ஏற்பட்ட நெருக்கடியில் ஒரு பெண் பிரயாணி உயிரிழந்துள்ளதுடன் 90 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

விமானநிலைய அதிகாரி ஒருவர் இச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர்-ஜே.வி.பிக்கிடையிலான உடன்படிக்கை கைச்சாத்தானது



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதற்கென ஜே.பி.யினரால் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று காலை 11.55 மணிக்கு கைசாத்திடப்பட்டது.

நேற்று காலை அலரிமாளிகையில் மத வழிபாட்டுடன் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கட்சி தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றினர்.

பின்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பி சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

உடன்படிக்கை கைச்சாத்தானதையடுத்து அரசியல் தலைவர்கள் பலரும், இருவருக்கும் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்த கைச்சாத்திடும் வைபவத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் கருணா குழு உறுப்பினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர் இ.போ.ச டிப்போவுக்கு அருகாமையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞரொருவர் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் சூட்டுக்கொல்லப்பட்டுள்ளார்

இ.போ.ச டிப்போவுக்கு முன்பாக ஒரு கடையின் அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மீது பிரஸ்தாப நபர் துப்பாக்கிச் சூடு நடாத்தியதாகவும் இதனையடுத்து பொலிஸார் திருப்பிச் சுட்டதில் அவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் துப்பாக்கிபிரயோகம் செய்த(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..!

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



### இன்று ஆறாம் திருவிழா

## தாயுமான துர்க்கை

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உடமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

# அரனை அருச்சித்து அமரர்கோன் அவலம் அகன்றான்

அமரர் கோன் அவுணர்க்கு அஞ்சினான்.விண்ணுலகு வாழ்வை வெறுத்தான். அயிராணியோடும் மண்ணுலகிற்குச் சென்றான். பரமர் பதியான வேணுபுரத்தை வதிவிடமாகக் கொண்டான்.

மருத்துவன் மனக்கவலை மாறவும், அமரர் சுவர்க்க வாழ்வு பெறவும், சயந்தனும தேவரும் சிறை மளவும், தான அமர நாடாளவும்,அவுணர் மாளவும்,சிவபிரானைப் போற்றிப் பூசனை புரிய மனம்



வலித்தான்.சிவார்ச்சினைக்குரிய மலர்கள் கொள்வதற்கு ஓர் நந்தவனத்தை நன்கு கோலினான்.

முல்லை, மல்லிகை, கோங்கு, சண்பகம், கொன்றை, பாதிரி, பாரிசாதம், செருந்தி, அலரி, செவ்வந்தி முதலிய மலர் தரு தருக்களை நாட்டினான். அம்மலர் கொண்டு செம்மல் சேவடி அர்ச்சன்னை புரிந்து அமரர் நாதன் பிரமபுரத்தில் அமர்ந்திருந்தான்.

அவ்வழி சென்ற அவுணர் ஆனைக்கு அஞ்சி முகில் மழையை மறுத்தது. நறுமலர் நல்கும் பூங்கா நீரின்றி வாடியது. இந்திரனுடைய சிவபூசைக்கு பூக்கள் தடைப்பட்டது. சிவபூசை முட்டுப்பட்டதால் இந்திரன் மனம் வருந்தினான்.

அந்நாளில் ஓர்நாள் நாரத முனிவர் அங்கு வந்தார். "இந்திரனே! குறைவற்று இருக்கின்றாயோ? "என்று நாரதர் விசாரித்தார்.

"சிவபெருமானை அருச்சிப்பதற்கு நந்தவனம் ஒனறை அமைத்தேன் சுவாமி! அது நீரின்றி வாடி வதங்குகின்றது. பூசை புரிவதற்கு ஒரு போதோ பூவும் இல்லை, இதுவே எனது மனக்குறை" என்று இந்திரன் இயம்பினான்.

நாரத முனிவர் நவின்றார்.

"இந்திரா! கவலை கொள்ளாதே! அகத்திய முனிவர் கயிலையிலிருந்து கமண்டலத்தில் காவிரி தீர்த்தத்தோடு வந்து கொங்கு தேசத்தில் தங்கியுளளார். குண்டிகையிலிருக்கும் பொன்னி நதியை இங்கு வரச் செய்தால் நின்குறை நீங்கும்" என்றார் நாரதர்.

குறை இரந்து முறையிட்டு வணங்கினார்.

ஏகதந்தர் காக வடிவங் கொணடார். அகத்தியர் அருகிருந்த கமண்டலத்தை மெதுவாகக் கவிழ்த்து விட்டார். கமண்டலம் கவிழந்ததும் உள்ளிருந்த பொன்னி ஆறு பூமியில் பொள்ளெனப் புறப்பட்டுப் பொங்கிப் பாய்ந்தது.

காவிரி வெள்ளம் இந்திரன் காவிலும் பாய்ந்தது. வருந்திய இந்திரனைப் போல வாட்டமுற்றிருந்த நந்தவனம் பசுமை பூத்தது. சோலைவனம் போலானது. பாலைவனம் போலிருந்தது.

பூவனம் பூரித்த இந்திரன் இறும்பூதெய்தினான்.

பூமரங் கொடிகளில் தளிரும் அரும்பும் மொட்டும் முகையும் பொலிந்து நகைசெய்தது.

இந்திரன் மனங்களில் தான் இழந்த சுவர்க்கத்தை மீண்டும் பெற்றவன் போல் உவகை உற்றான். நாகர் கோள் நந்தவனத்தில் நறுமலர் கொய்தான் விட்ட சிவார்ச்சனையை மலர் தொட்டுப் பூசித்தான்.

## வெள்ளிநற்சிந்தனை

"முனிவர் மொழிவது முற்றும் உண்மை.ஆனால், அகததிய முனிவருடைய கமண்டலத்தில் அடங்கி இருக்கும் வரநதி தன்னை இங்கு வரச்செய்யும் வழி அறியேன்" என்று இந்திரன் சொன்னான்.

"இந்திராணி கேள்வ! வேழ முகத்து விநாயகக் கடவுளுக்கு விரும்பும் பேரமுது அருத்திக் கரிமுகக் கணபதியை வழிபாடு செய். கமண்டலக் காவிரி ஆற்றைக் கவிழ்த்து விடும்" என்று நாரதர் நன்மொழி நவின்று சென்றார்.

இந்திரன் இளநீர்,தினைமா, தேன், முக்கனி, பாகு,மோதகம் முதலானவற்றை நிவேதித்தான். கணபதியைக் கைதொழுது தன்

இந்திரன் விடியல் வைகறை எழுவான், வண்டு தேன் கொள்ளு முன் மலர்கள் கண்டு கொய்தான். அரனார் அடிகளில் அன்போடு அமரர்நாதன் அருச்சனை ஆற்றி வந்தான்.

இந்திரனுடைய சிவபூசைப் பேறாக எண்ணியது கைகூடியது.

**சிவ சண்முகவடிவேல்**

சயந்தனும் தேவர்களும் சிறை மீண்டார்கள். அவுண குலம் அழிந்தது. அமரர் குலம் வாழ்ந்தது. இந்திரன் தெய்வ தரிசனத்தோடு, அமராவதி ஆளுகையையும் இந்திர செல்வமும் ஏய்தி இன்பமுற்றான். □

# இராசி பலன்

**09.09.2005**
**(ஆவணி 24, வெள்ளிக்கிழமை)**
**சஷ்டி பின்னிரவு 03.12 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 12.20 மணிவரை**
**இராகுகாலம் 10.34 - 12.04 மணிவரை**
**சுபநேரம் 6.04-7.34 மணிவரை**
**சஷ்டி விரதம**

| | |
|---|---|
| மேடம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய், நல்ல வரவேற்பு. |
| இடபம் | பணவருவாய், சுகவாழ்வு, சத்துரு ஜெயம், காரிய சித்தி. |
| மிதுனம் | வியாபார சிந்தை, திடீர்நன்மை, காரிய இடையூறு, உடல் நலக் குறைவு. |
| கடகம் | அற்பர் உறவு, புதிய திருப்பம், தன்னம்பிக்கை குறைவு, பயந்த சுபாவம். |
| சிங்கம் | இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை,பிரயாண நன்மை. |
| கன்னி | கௌரவ குறைவு, பொருள் விரயம், உஷ்ண வியாதி, முயற்சி தாமதம். |
| துலாம் | ஆழ்ந்த சிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் பாராட்டு, போசன சுகம். |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்படுதல், நிலை மாற்றம், பிரயாணம், சுபசெலவு, |
| தனுசு | தெய்வதரிசனம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, காரிய சித்தி. |
| மகரம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, தெய்வ சிந்தை, நல்ல செய்தி. |
| கும்பம் | அச்சமான நிலை, உடல் உழைப்பு, பிரயாணம், அதிக செலவு. |
| மீனம் | பிரயாண பயம், காரியதடங்கல், உடல் நலக்குறைவு, திடீர் நன்மை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

# பதவி வெற்றிடம்

பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சினால் அலுவலக உதவியாளர் சேவை வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச மாகாண சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வய தெல்லை ஏற்புடையதல்ல.

அத்துடன், விண்ணப்பதாரி க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 6 பாடத்திற்குக் குறையாமல் இரண்டு திறமைச்சித்தி உள்ளடங்கலாக ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணபங்கள் 2005.09.16ஆம் திகதிக்கு முன்னராக பதிவுத் தபால்மூலம் செயலாளர் பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சு, 5ஆம் மாடி செத்சிறிபாய, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் அரச சேவையில் அலுவலக உதவியாளர் சேவை, வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்-2005 எனக் குறிப்பிடப்படல் வேண்டும். (அ-19)

# "சிரச" ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு கண்டனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 54ஆவது வருடாந்த மாநாட்டில் செய்தி சேகரிக்கச்சென்ற "சிரச" ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை வனமையாகக் கண்டிப்பதாக சுதந்திர ஊடகஅமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு தொடர்ந்து நெருக்கடிகளை ஏற்படுத்துவது ஊடக சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத்தலாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் சிரச ஊடகவியலாளர்களை தகாத வார்த்தையினால் பேசி தாக்கிய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தனியார் ஊடகங்களுக்கு எதிராக மக்களை தூண்டிவிடும் வகையில் சில அரசியல்வாதிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரதிபலன் இதுவாகும். காலி மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்களில் வந்தவர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக நாம் கருதுகின்றோம்.

இவ்வாறான சம்பவங்களினால் ஊடகவியலாளர்களின பணிகளுக்கு தடைகளும் கட்டுப்பாடுகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான தடைகளை நீக்கிய ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் கடமையில் ஈடுபட வழிவகுக்குமாறு அரசியல்வாதிகள்,அரசியல் கட்சிகளை நாம் வேண்டுகின்றோம் எனவும் அவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ற-8)

# ஜனாதிபதி தேர்தலில் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த "பவ்ரல்" அமைப்பு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கவென 20 ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது.

அரசியல் கட்சிகள் தமது வேட்பாளரை வெற்றியடையச செய்ய, வன்முறையை கைக்கொள்கின்றதா என்பது குறித்து கண்காணிப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்துவார்கள் என பவ்ரல் அமைப்பின் பணிப்பர்ளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறை கண்காணிப்புப் பணியில் 100 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கண்காணிப்பு நடவடிக் கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-7)

# மாறிவரும் சனி வளையங்கள்

(லொஸ் ஏஞ்சலீஸ்)

சனி கிரகத்தைச் சுற்றி அமைந்துள்ள வளையங்கள் மாற்றமடைந்து வருகின்றன என்பது காஸினி விண்கலம் சமீபத்தில மேற்கொண்ட ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

வானியல் மேதை கலலியோவின் காலத்தில் இருந்தே இந்த சனி வளையங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரும் புதிராக இருந்துவந்துள்ளன. காஸினி விண்கல ஆய்வில் வெளிப்பட்டுள்ள புதிய தகவல்கள் வருமாறு,

1981ல் வாயேஜர் விண்கலம் சனி கிரகத்தை ஆராய்ந்தது. அதற்குப் பிந்தைய கடந்த 24 ஆண்டுகளில் "டி" வளையம் என்று அழைக்கப்படும் சனி கிரக உள் வளையத்தின் சில பகுதிகள் மங்கத் தொடங்கிவிட்டன. அந்த டி வளையத்தின் ஒருபகுதி சனி கிரகத்தை நோக்கி 200 கி.மீ. தொலைவு நகர்ந்து நெருங்கிச் சென்றிருக்கிறது.

இந்தக் குறுகிய காலத்தில் டி வளையத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பது விஞ்ஞானிகளுக்கு புதிராக உள்ளது. எனினும் இந்த ஆய்வு விவரங்கள் வளையங்களைக் கொண்டுள்ள கிரகங்களின் வயதுபற்றி புதிய தகவல்களைத் தரக்கூடும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

ஆரம்பத்தில் சூரியனைச் சுற்றியிருந்த வாயு மற்றும் தூசு வளையத்தின் மாதிரியாக சனி வளையங்கள் கருதப்படுவதால், அது குறித்த ஆய்வுகள், 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கிரகங்கள் எவ்வாறு தோன்றின என்பதை அறிய உதவும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

சனி கிரகத்தின் முக்கியமான பிற வளையங்களான ஏ.பி.சி. வளையங்களில் அமைந்துள்ள பனித்துகள்கள் எதிர்பார்த்ததை விடவும் மெதுவாகச் சூழல்கின்றன என்பதும் இப்போதைய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சி வளையத்தை விடவும் ஏ,பி வளையங்கள் வேகமாகச் சுழல்வதாகக் கருதப்பட்டு வந்தன.(ற)

# கடல்கோள்

# காவுகொண்ட சமூக உளம்

⑥ (தொடர்ச்சி...)

**சமூக உள இடை உதவல்கள்**

சாதாரண சூழலில் மக்கள் தங்கள பிரச்சினைகளை தாமாகவே தீர்ப்பர். ஆனால் இவ்வனர்த்த சூழலில், மக்களின் சமநிலை பாதிகப்பட்டு உணர்வு மாற்றங்களை காட்டும்.

அவர்கள் வெற்றிகரமான எதிர்கொள்ளலை அடையும் வரை, உணர்வு ரீதியான ஆதரவு தேவை.

விழுந்து கிடப்பவனை இருந்து எழுப்பி சுயமாக நடக்க வைக்கும் நிலை வரவேண்டும்.

*உள்ளார்ந்த உணர்வு*

**1.உணர்வுகளை வெளியேற்றல்**

*பகிர்வதால் உணர்வுகளையும் உணர்ச்சி கதைத்து அனுபவங்களை பகிரல்.*

இழப்புகளைப் பற்றி கதைப்பதால் சுகமடைவர்.

அழுத்தத்தை குறைக்க உதவுவர்.

மிகவும் முக்கியமானது நெருக்கீட்டிற்கு உட்பட்டோர் சாந்தமடைய கஷ்டப்படுவர். வேறு அறிகுறிகள் காணப்படலாம்.

**அனர்த்தம — மன நெருக்கீடு இயலாமை**

**சமூக நிலை மேம்பாட்டாளர் செய்ய வேண்டியவை**

| | | |
|---|---|---|
| *அவர்களது மாற்றங்களை விளங்கப்படுத்தல் உணர்வுகளை வெளிப்படுத்தல் உயிரோட்டமான செவிமடுத்தல் அவர்கள் உணர்வுகள் தாங்கல் உணரல்.* | *உடல் உள மாற்றம் குறைத்தல் பதற்றத்தை மறைத்தல் வேறு முயற்சிகளில் ஆர்வம் காட்டல் வாழ்கை முறையில் தெளிவு. சமூக ஆதரவு. ஆன்மீக வளர்ச்சி சுகாதார வசதி.* | *சிதறிய வாழ்க்கையை மீளக் கட்டி எழுப்புதல் நட்டஈடு பெற உதவுதல் வீடுகள் அமைக்க உதவுதல் வீட்டுச் சாமான்கள பெற உதவுதல் அதிகம் பாதிக்கப்பட்டவருக்கு உதவல மருத்துவம்.* |

மேற்கூறிய மூன்றும்

உணர்வு அசௌகரியா நிலை அனுசரித்து எதிர்கொள்ள உதவும்.

**உளவியல் முதல் உதவி**

**அனர்த்தத்தின் நிலை**

- உடனடித் தேவைகளை கொடுக்கல: உணவு, உடை, உறைவிடம், மருந்து.
-பாதுக்கப்பட்டவருடன் உரையாடல்.
- குடும்ப அங்கத்தவர்களை இணைத்தல்.
- நிவாரணம் பெற உதவல்.
- மருத்துவ தேவைகளை கவனித்தல்

**சமூக உள பராமரிப்பில் ஏழு அம்சங்கள்**

*அனர்த்தத்தில உபயோகிக்க கூடிய 7 முறைகள்*

1.உணர்வுகளை ,வெளியேற்றல்.
2.உள்ளார்ந்த உணர்வு.
3.உயிர்ப்பான செவிமடுத்தல்.
4.வேறு செயல்களில் நாட்டம் ஏறபடுத்தல்.
5.சமூக ஆதரவு.
6.தளர்வாதலும் பொழுதுபோக்கும்.
7.ஆன்மீகம்.

1.அவதானமாக செவிமடுத்தல்
2.கண் தொடர்பைப் பேணல்
3.அசௌகரியங்களை ஏற்றுக் கொள்ளல்
4.குறுக்கிடக்கூடாது
5.அழுவதை நிறுத்துமாறு கூறக் கூடாது
6.கையைப் பிடித்து, தோளைத் தட்டி ஆறுதல் கூறலாம். சமூகத்தின் கலாசாரத்திற்கு ஏற்ப பேசுதல்.

**2.அதனாலாதல்/ உள்ளார்ந்த உணர்வு**

நாம் மற்றவர்களைப் பார்க்கும போது அவர்களின் வெளித்தோறறமே எமக்கும் தெரியும். அவர்களது உணர்வுகளும் வேதனைகளும் எமக்குத் தெரிவதில்லை. ஆனால் நாம் முயற்சி செய்தால் அவர்களின் மனநிலையை அறியலாம்.

மற்றவர்களின் துன்பத்தை தமது துன்பமாக உணரும் நிலையிலேயே உணர்வுகளை பகிரமுடியும். இதனை துணைநாடி உணரக்கூடியதாக இருக்கும்.

**3.உயிரோட்டமான செவிமடுத்தல்**

சரியான செவிமடுத்தல், உணர்வு பூர்வமாக ஆதரவுக்கு மிகவும் முக்கியமானது.

சமுதாயத்தில் அனர்த்தத்தின் பின் இரகசியம் கதைப்பதற்கான வெற்றிடம் காணப்படும் சூழல் சத்தம்மிக்கதாக இருக்கும்.

கண்தொடர்பைப் பேணல் போது இடைக்கிடை தலையசைத்தல், ஆம்மெனல், செவிமடுத்தல், குறுக்கிடுதல் தவிர்த்தல்.

கூறுவதனை அப்படியே ஏற்றல், உள்ளார்ந்த உணர்வுக்குட்படல், உணர்ந்ததாகக் கூறல்.

**4. புறக்காரணிகளில் கவனத்தைத் திருப்பல்**

வேறு தொழில்களில் ஈடுபட ஊக்குவித்தல்.

மீளலில் உதவும் மக்கள் வேலை செய்யும் போது இருக்கும் போது மனம் பிரயோசனமாக செயறபடும். இதனால் அவர்கள் ஆறுதலாக இருப்பர்.

வேலை செய்தல் நல்லது.
கால்நடை வளர்த்தல்.

**5. சமூக ஆதரவு**

**உணர்ச்சிபூர்வமான ஆதரவு**

சூழலில் இருந்து கிடைக்கும் போது திருப்தியாக இருக்கும்.

*சமூக ஆதரவு*

அனர்த்தத் தின்பின் அழிந்து காணப்படும் புதிய நகருக்கு போகும் போது படிப்பதற்கு /வேலை செய்வதற்கு பாதுகாப்பின்மை, தனிமை, பயம் என்பன ஏற்படுகின்றது. அங்கு எம்மைத் தெரிந்தவரை கண்டவுடன் சந்தோசம் ஏற்படுகின்றது. அதே போல் சூழல் அழிந்த பின்பும் கட்டமைப்பை மீள அமைக்க வேண்டும். அதனாலேயே பாதிக்கப்பட்டவர்கள் மனத்தாக்கத்திற்கு உட்படல் குறையும் பாதுகாப்பை உணர்வர்.

**6.சாந்த வழிப்படுத்தலும் பொழுது போக்குகளும்**

சாதாரண வழமைக்கு திரும்ப, ஒருவரது மனதில் நெருக்கீட்டின் உணர்ச்சிகளை மாற்ற வேண்டும். சாந்தவழிப்படுத்தலும் பொழுது போக்கு வசதிகளும் நெருக்கீட்டை குறைத்து மீள்நிலைக்கு கொணடு வரும். பொழுது போக்கு நடவடிக்கையில் ஈடுபடும் போது மிகவிரைவில் மீளக்கூடியதாக இருக்கும். விளையாட்டுக்கள், சங்கீதம், சுவாசப் பயிற்சிகள், சாந்தவழிகள் மூலம் பதகளிப்பினை குறைக்கலாம்.

**சுவாசப் பயிற்சி**

இருந்து கையை முழங்காலில் வைத்து ஆழமான மூச்சு எடுத்து, சில செக்கன்கள் மூச்சை விடாது பின் படிப்படியாக வெளியிடல். 5-10 நிமிடங்களுக்கு மீளவும் செய்யவும். ஒரு நாளைக்கு காலை, மாலை இருதடவைகள் செய்யவும். நிலத்தில் படுத்து இருந்து செய்யலாம்.

**7.ஆன்மீகம்**

சமய நம்பிக்கைகளை வலுவூடடல்.

எல்லாவற்றிற்கும் மேலான சக்தியில் நம்பிக்கை வைத்தல். அந்தந்த சமய நம்பிக்கைகள், சடங்குகளை இவை தனிப்பட்ட குடும்ப, சமூக மட்டத்தில் பயனபடுத்தலாம்.

**தனிநபர்களுடன் வேலை செய்தல்**

1.கதைக்க விரும்புபவர்களுடன் செவிமடுத்தல்.

குறுக்கீடு இன்மை, துன்பத்தை விளங்கி கொண்டதாக கூறல்.

கண்களைப் பார்த்து தேற்றுதல்.

கதைக்கும் போது ஏற்படும் நிசப்தத்தை கதைப்பதால் குழம்பாதீர் நாம் உம்முடன் உள்ளோம் எனக கூறல்.

அழுவதை நிறுத்துமாறு கூற வேண்டாம்.

2.கதைக்க விரும்பாதவர்களுடன் உதவ வந்துள்ளதாகக் கூறவும்.

தொடர்பை ஏற்படுத்த

காலை/ மாலை வந்தனம் தெரிவிக்கவும்.

அவர்களது நலன்கள் பற்றி கேட்கவும்.

பிரிவுத்துயர், தனிமை என்பவற்றின் வேத்னைகளைப் பற்றி அறியவும்.

துன்பங்களை/ விரக்தியை/ வெறுமையை உணர்வதாக கூறவும். இழப்பால் ஏற்பட்ட வெற்றிடம் ஏற்படுத்திய கோபம்.

**துன்பத்தைப் பகிரல்**

அன்புக்குரியவரின் இழப்பு பயங்கரமானது. துர்ப்பாக்கியமானது எனக் கூறல்.

இந்நிலைக்கு அவர்கள் காரணமில்லை. குற்ற உணர்வை நீக்கல்.

கதைக்காதது பற்றி காரியமில்லை.

இவர்களுடன் வாழ்ந்த நினைவுகள் ஞாபகத்தில் உயிருடன் இருக்கும். இவை மீண்டும் வரும். இதனால் பதற்றம் ஏற்படும். வெளிக்கொணர உதவுதல் வேண்டும். சிறு பிள்ளைகளுடன சித்திரம் வரைதல், களிமண் விளையாட்டு, மணல் விளையாட்டு என்பன ஆற்றுப்படுத்த உதவும்.

ஒருவா கதைக்கத் தொடங்கியவுடன் பின்வருவனவற்றை கதைகலாம்.

எப்படி இருக்கின்றீர்கள்?
குடும்ப அங்கத்தவர்கள் எப்படி?
உமது குடும்பத்திற்கும் உமக்கும் ஏற்பட்ட இழப்புகள்?
அனர்த்தத்தின் பின் உதவியவர்கள்?
நீங்கள் மீள்கின்றீர்களா?
நிலைமையை எவ்வாறு சமாளிக்கின்றீர்கள்?
உடல் ஆரோக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம்?
நித்திரையில் ஏற்படுத்திய தாக்கம்?
எதிர்காலத்தை எவ்வாறு பார்கதின்றீர்கள்?
வேறு என்ன உதவிகள் தேவை?

**மீள்வதில் செய்ய வேண்டியவை**

1.உண்மையான தகவல்களைப் பெறல்.
வதந்திகளை நம்பக்கூடாது.

**டாக்டர்:சி.யமுனாநந்தா**

2.எஞ்சிய குடும்ப அங்கத்தவர்களுடன் வாழ்தல்.
3.ஒரே இடத்தைச் சேர்ந்தவர்களை ஒன்றாக்குக.
4.வழமையான நடவடிக்கைகளுக்கு விரைவில செல்லலும்.
5.உணர்வுகளையும் அனுபவங்களையும் உறவினர்களுடன், நண்பர்களுடன் பகிரவும். இதனால் அவை அகலும்.
6.புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபடவும்.
7.மதுபானம் பாவித்தல், புகைத்தல் தவிர்க்க வேண்டும்.
8.8 மணி நேர நித்திரை.
9.உணவு
10.மனதை தளரச் செய்தல், விளையாட்டுகள், பாட்டுக்கள்
11.முழுமையாக செயல்பட சில காலம் எடுக்கும் எனக்கூறல்.

*(முற்றும்)*

## இலங்கை வரைபட மீளமைப்புக்கு உதவ ஐரோ.ஒன்றியம் இணக்கம்

(கொழும்பு)

இலங்கையின் வரைபடத்தை மீளமைப்பு செய்வதற்கு தேவையான செய்மதி தொழில்நுட்பத்தை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆராய்ந்து இலங்கையின் வரைபடத்தை மீண்டும் உருவாக்கவுள்ளதாக நில அளவையாளர் நாயகம் வி.ஜே.பி.மென்டிஸ தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இந்த நிலப்பரப்பில் ஏற்பட்டுள்ள மாறறங்கள் குறித்து ஆராய்வதற்காக செய்மதி தொழில்நுட்பத்தை பயன்படுத்தப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ரு-9)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில்

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமையவிருக்கிறது.

கிளிநொச்சி பொன்நகரில் 400 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் விவசாய பீட கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 3 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் தற்போது பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக திருநெல்வேலியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரு-7)

## உள்ளூராட்சி வார செயற்பாடுகள்

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை நகரசபை பருத்தித்துறை நகரில உள்ள காந்திச்சிலையைப் புனரமைத்து வர்ணம் பூசி அழகுபடுத்தவுள்ளதாகவும் அத்தோடு பருத்தித்துறை நகரசபையின பொதுநூலகமும் புனரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்படவுள்ளதாகவும் நகரசபைப் பகுதியில் உள்ள முன்பள்ளிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டியை நடாத்தவுள்ளதாகவும் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே 10 ஓவர் கொண்ட கிறிக்கெற் போட்டியை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படடுளளது.

மேலும், கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கும், பிரதேசத்தில் உள்ள கிணறுகளுக்குக் குளோரின் இடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை நகரசபைச் செயலாளர் திருமதி கமலா திருச்செல்வநாயகம் மேற்கொண்டுள்ளார். (ரு-52)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத தொடரில் இன்று 10.30 மணிக்கு "பெண்கள் ஆற்றிய சமய தொண்டு" என்னும் பொருள் பற்றி இராமநாதன் கல்லூரியின் முந்நாள் அதிபர் திருமதி.மங்கையற்கரசி சிற்றம்பலம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (த-35)

## கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகடகிடையே உதைபந்தாட்டம் மற்றும் தாச்சிப் போட்டிகளை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவவிடயம் சம்பந்தமாகப் பொறுப்பாசிரியாகளுக்கான கூடடம் இன்று வெள்ளிக்கிழமை 2.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாவும் கோட்டக் கலவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-79)

## மக்கள் சிரமம்

(கோப்பாய்)

கையடக்கத் தொலைபேசியின அன்ரனா கோப்பாய்ப் பகுதியில் அமைந்துள்ளது. ஆயினும் கையடக்கத் தொலைபேசிகளின் தொடர்பைச் சீராகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என இப்பகுதி மக்களால விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஒழுங்காகத் தமது நடவடிக்கைகளை மேற்கொளவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கினறனர். (த-79)

## சட்டவிரோத மின் பாவனை இருவருக்கு ரூ.46000 அபராதம்

(கொழும்பு)

சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட இரு குடுமபத்தவர்களுக்கு, 46,000 ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் மின்பாவனை உபகரணங்களைப் பறிமுதல் செய்ததுடன் சட்டவிரோத மின்பாவனையாளர்களையும் கடுமையாக எச்சரிக்கை செய்தது.

கரவெட்டி அத்தரய கிராமத்தில் சட்டவிரோத மின்பாவனையிலீடுபட்ட இருவரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கிராமசேவை அலுவலரால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரும் சட்டவிரோதமாக மின பாவனையில் ஈடுபட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி இருவருக்கும் தலா 23,000 ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் சட்டவிரோத மின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட மின் உபகரணங்களையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டு அவர்களைக் கடுமையாக எச்சரிக்கையும் செய்தார். (ரு-52)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியலதுறைப பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனை சந்திக்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இச் சந்திப்பின் போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று தெரிகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்க முன்வந்துளளன.

இனவாதப் போக்கை கடைப்பிடித்து வரும் இந்தக கட்சிகளின் கூட்டினால் எழுந்துள்ள அரசியல நிலவரம் குறித்து இககூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த-9)

## பயிற்சிப் பட்டறை

(மருதங்கேணி)

பருத்தித்துறை பகுதியிலுள்ள 35 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சிப் பட்டறையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய நிதி உதவியுடன் அகதிகள் புனாவாழ்வு நிறுவனம் அணமையில் நடாத்தியது. (த-35)

# இன்று ஒரு தகவல்

## உள்மன ஆற்றல்

ஒரு விஞ்ஞானி ஒரு ஊசியைக் கண்டுபிடிப்பதற்காக நீண்ட காலம் தலையைப் பிய்த்துக்கொண்டிருந்தார். அது எந்த ஊசி தெரியுமா? தையல் மெஷினில் இருக்குமே... அந்த ஊசிதான். அவருக்குப் பிடிபடாமல் இருந்த விடயம் என்ன வென்றால் அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படி சேர்ப்பது? மற்ற ஒருபாகம் மெஷினுக்குள்ளே போய் விடுகிறது... அதனால் அந்த பாகத்தில் சாதாரண ஊசியில் செய்வதுபோல் நூலை நுழைக்க முடியாது! அப்படியே நுழைத்தாலும் தைப்பது எப்படி சாத்தியமாகும்? இதுதான் அவருக்கு இருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார்... தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப்புலப்படவில்லை.. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார் ஒருநாள் அவர் தூங்கிக்கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கனவு கண்டார்.அந்தக் கனவில் அவரை ஒரு மலை சாதியினர் பிடித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். கொண்டுபோய் ஒரு இடத்தில் கட்டி வைத்துவிடுகிறார்கள். அந்த மலை சாதி மக்களின் அரசன் ஒருவன் வருகிறான். அவரைப் பார்த்து ஒரு உத்தரவிடுகிறான். என்ன உத்தரவு தெரியுமா? "பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டுபிடிக்க வேண்டும் அப்படிக் கண்டுபிடிக்காவிட்டால் உன் தலையை வெட்டிவிடுவோம்" இதுதான் அந்த அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழிக்கிறார். இந்த நேரத்தில் அந்த மலை சாதியினர் அவரைச் சுற்றிச் சுற்றிவந்து பயங்கரமாக முழித்துக் கொண்டு நடனம் ஆடுகிறார்கள்.

தன்னைச் சுற்றி சுற்றி ஆடிக்கொண்டுவரும் அவர்களைப் பயத்தோடு இவர் பார்க்கிறார். நேரம் ஆக ஆக தனது இறுதி நேரம் நெருங்குவதை உணர்கிறார். நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றி ஆடுபவர்களைக் கவனிக்கிறார். அவர்களின் கைகளில் ஈட்டி மாதிரி ஒரு ஆயுதம் வைத்திருக்கிறார்கள். அந்த ஆயுதத்தை இவரது கண்ணுக்கு நேராகக் கொண்டு வருகிறார்கள். அதை அவர் பார்க்கிறார்.

அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனிக்கிறார்: அந்தக் கூரான முனையில் ஒரு சிறிய துவாரம் தெரிந்தது. உடனே அவருக்கு பளிச்சென்று ஒரு ஐடியா உதயமானது "இதைத்தானே இவ்வளவு காலமும் நான் தேடிக்கொண்டிருந்தேன்.

கூரான முனையில் ஒரு சிறு துவாரத்தைப் போட்டு விட்டால் அதன் மூலமாக நூலைச் செலுத்தி மறு முனையை மெஷினில் தைத்துவிடலாம். தையல்மெஷின் ஊசி ரெடி" என்று நினைத்தார்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. உடனே தனது தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார்.இது எப்படி என்று நினைக்கலாம் நீங்கள். ஆனால் அது சாத்தியம் தான்.

விழித்திருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடை கிடைப்பது உண்டு. உங்களில் பலருக்கு இதுபோன்ற அனுபவம் ஏற்பட்டிருக்கலாம்.

எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தச் செயல் நமது நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயல்திட்டத்தை எந்த அளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்க முடியும்.

அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவரது எண்ணம் முழுவதையும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினைத்தது அவரது கனவில் உருவாகி அதற்கு செயல் வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டென்று சொல்கிறார்கள். தூக்கத்தை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவது எப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்போது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள்... பயிற்சியும் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைப் பற்றி லேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருவருக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி. அதற்காக மருந்து பாவித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அவரைப் பார்த்துக்கேட்டேன்.

"உங்கள் தூக்கத்தில் நடக்கும் வியாதிக்கு மருந்து சாப்பிட்டீர்களே.. ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா?" என்றேன். "தெரிகிறது" என்றார். "எப்படி?" என்றேன். "முன்பு எல்லாம் தூக்கத்திலிருந்து 10 அடிதூரம்தான் நடப்பேன் இப்போது 40 அடிவரை நடக்கிறேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பிரதமர் - ஜே.வி.பி கூட்டு குறித்து அரசியல்கட்சி பிரதிநிதிகளின் கருத்துகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேடபாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பிகட்சி 12 நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை தொடர்பாக அரசியல கட்சிப் பிரதிநிதிகள் பலர் கருத்து வெளியிட்டுள் ளனா.

### ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண

ஜனாதிபதி முன்நோக்கி நகர்ந்து சுனாமி நிவாரணசபையை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தார். இதனால் ஜே.வி.பி கூட்டமைப்பு அரசிலிருந்து வெளியேறியது. ஆனால் மீண்டும் பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

அதாவது அன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால ஏற்றுக்கொள்ள முடியாத கொள்கைகள் இன்று மஹிந்த ராஜபக்ஷவினால் கொள்கைகளாக்கப்பட்டுள ளன. இது கூட்டமைப்பு அல்ல ஜே.வி.பியின் தேர்தல் கொள்கைகளுக்கு பிரதமர் கையொப்பம் இட்டுளளமையாகும். தவறு என்னவெனில் பிரதமர் வெற்றிபெறும் பட்சத்தில் இந்த நாடு அவ்வளவு தான்.

மீண்டும் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கும் பட்சத்தில் அந்த யுத்தத்தை பிரபாகரன் நடாத்துவது நியாயமானதென சர்வதேச சமூகம் கூறத்தொடங்கும். காரணம் இந்த அரசாங்கம் யுத்தத்தை இல்லாதொழிப்பதற்கு செயற்படவில்லை. இதனால் அவர்களின் கூட்டமைப்பு வெற்றிபெறமுடியாது. வெற்றி பெற்றால் அது நாட்டை முடிவுக்கே கொண்டுவரும்.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

தமிழ மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகவே பிரதமர் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் கருதுகின்றனர்.

இந்த ஜே.வி.பி தான் கூட்டமைப்பு அரசிலிருந்து கொண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையை எதிர்த்தது. பேச்சுவார்த்தையை எதிர்த்தது. இடைக்கால நிர்வாக சபையை எதிர்த்தது. சமஷ்டியை எதிர்த்தது. பொதுக் கட்டமைப்பை எதிர்த்தது.

இந்தநிலையில் இவ்வாறான தமிழ் மக்களுக்கு எதிரான இக் கட்சியுடன் பிரதமர் கூட்டுச்சேர்ந்து ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது விரோதமான செயலாகவே காணப்படுவதுடன் நாட்டுக்கு நல்லதாகவும் எமக்கு தெரியவில்லை.

ஜே.வி.பியும் பிரதமரும் கைச்சாத்திடும் ஒப்பந்தத்தின் பொதுக்கட்டமைப்பு நீக்கப்பட வேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேசக்கூடாது என்ற அடிப்படையில் ஜே.வி.பி முன்வைத்திருக்கும் நிபந் தனைகளுக்கு பிரதமர் ஏற்றுக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தமிழ்மக்களின் பிரச்சி னையை சரியான முறையில் அணுகாமல் மீண்டும் இலங்கைத்தீவில் ஒரு யுத்த சூழ்நிலையை ஏற்படுதது வதற்கு முயல்கின்றமையையே எடுத்துக்காட்டுகின்றது.

### மாற்றுக்கொள்கைகளுக்கான பணிப்பாளர் நாயகம் பாக்கியசோதி சரவணமுத்து

பிரதமர் ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு இணங்கியுள்ளதையிட்டு நான் மிகவும் கவலையடைகின்றேன. எமது பார்வையில் இது ஒரு முற்போக்கு தன்மை அற்றது. இந்த நிபந்தனைகளுக்கு இணங்கி எவ்வாறு நாட்டை நிர்வகிப்பது? சமாதான செயற்பாடுகளை எவ்வாறு முனனோக்கிக் கொண்டு செல்வது? பொருளாதாரத்தை எவ்வாறு முன்னேற்றுவது? எவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்வது? இதுபற்றி பிரதமருக்கு எவ்வித பயமும் இல்லை.

### ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள யோசனைகளால் நாடடில் அமுலில் உள்ள திறந்த பொருளாதார முறைமை முழுமையாக அருகிப்போகும் நிலை ஏற்படும்.

இப்படியான ஒருநிலை ஏற்படும் பட்சத்தில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலைமையை விட பாரதூரமான நிலையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

அத்துடன், இந்த நாட்டின் வர்த்தக சமூகம் மட்டுமல்லாமல் சாதாரண பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும்.

ஜே.வி.பி பிரதமருக்கு முன்வைத்த நிபந்தனைகள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன்

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணககப்பாட்டினால் தமிழ மக்கள் அபாயகரமான சூழலை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து தமது அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் உலகறியச் செய்ய பொது வேட்பாளர் நிறுத்தப்படுதல் தொடர்பாக சகல தமிழபேசும் கட்சிகளும் ஒருமுகப்பட்டு ஒரு முடிவினை எடுத்தால் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பமாகவும், தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு ஒரு புத்தெழுச்சியாகவும் அமையும.

இதனடிப்படையில் சகல தமிழ் அரசியல் கட்சிகள், மறறும் மலையக தமிழ் அமைப்புக்கள் அனைத்திற்கும் அழைப்பு விடுத்திருக்கின்றோம்.

இவர்களுடனான கலந்தாலோசனையின் போது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்பார்ப்புத் தொடர்பாக அதைப்போல் மலையக மக்களின அடிப்படையில் பிரச்சினைகள்,அரசியல் கோரிக்கைகள் சம்பந்தமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் உத்தரவாதம் அளிக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்படும்.

அதைவிட மிக முக்கியமாக தற்போது இனவாத அரசியல் இலங்கையில் வளர்ந்து வருகின்றது. இவ் வியூகத்தில் இருந்து எமது மக்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நாம் எப்படிப்பட்ட நிலைப்பாட்டை தற்போது எடுக்க வேண்டும் என்பதையும் நாங்கள் கலந்து பேசவுள்ளோம எனவும் அவர்கள் தத்தமது கருத்துக்களை வெளியிட்டுள் ளனர்.

(ந-8,4)

# முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு அரசியல்துறைக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் முனீஸ்வரன் வீதியில் வியாபாரம் செய்துவரும் முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் மீது தொடர்ச்சியாக சிறுகுழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் முனீஸ்வரன் வீதியிலுள்ள முஸ்லிம் அங்காடி வியாபாரிகள அனைவரும் கடை அடைப்பு செய்தனா.

அத்துடன், இத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முஹம்மதியா ஜும்ஆ பள்ளிவாசல் நிாவாக சபையினால் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.அம் மகஜரின் விபரம் வருமாறு,

யாழ்.நகர் முனீஸ்வரன் வீதியில் அங்காடி வியாபாரம் செய்துவரும் முஸ்லிம் இளைஞர்கள் சில நபர்களால் அடிக்கடி தாக்கப்பட்டு வருகின்றனர். இது விடயமாக பல தடவைகள் தங்களுக்கும்,எங்கள பள்ளிவாசல் நிர்வாக சபைக்கும் முறைப்பாடுகள் வெளிப்படுத்தப் பட்டன.

இது விடயத்தில் தங்கள் அமைப்பின் தலையீட்டில் சில சந்தர்ப்பங்களில் உடனடித் தீர்வும், பிரச்சினைக்கான மாற்றுவழிகளும் கிடைக்கப் பெற்றது என்பது உண்மை. ஆனால் இதுபோன்ற மிலேச்சத்தனமான செயல்கள முற்றுப்புள்ளி வைக்கப்பட முடியாமல் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருப்பதே அங்காடி வியாபாரிகளின் முக்கிய பிரச்சினையாகும்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன அண்ணனின் அழைப்பின் பேரிலேயே நாங்கள் இங்கு மள் குடியேற வந்துள்ளோம். எங்களுக்கு இங்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கும், உரிமை மறுப்புக்களுக்கும் தேசியத் தலைவரின் நிர்வாக அமைப்பு மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பது மறுத்துவிட முடியாத உண்மை யாகும்.

எனவே இதுபோன்ற சிறு சிறு குழுக்களின் தூரநோககற்ற செயற்பாடுகளும் உரிமை மறுப்புக்களும் அத்துமீறிய செயலகளும் இதற்குப்பிறகு எப்பொழுதும் முஸ்லிம அங்காடி வியாபாரிகளுக்கு நடைபெறக் கூடாது என தாங்கள் கருதினால் தங்கள் அமைப்பின் நேரடித் தலையீடே இப்பிரச்சினைக்கான உன்னத நிவாரண மாகும். இது ஏற்படும் வரையில் யாழ்.முனீஸ்வரன் வீதியில் முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் கடையடைப் புச் செய்துள்ளனர்.

ஆகவே, இவ்விடயத்தில் கூடிய கரிசனை செலுத்தி உரியநேரத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து தங்கள் தலைமையில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று யாழ்.முஹம்மதியா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபை சார்பாகவும், யாழ்.முஸ்லிம் அங்காடி வியாபாரிகள சார்பாகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# பரிசளிப்பு வைபவம்

(கொழும்புத்துறை)

அரியாலை சின்னாலங்கண்டு வீதி ஞானவைரவர் ஆலயத்தின் நிர்வாக சபையினரால் நடாத்தப்படும் வருடாந்த அன்னதான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வையொட்டி நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும் கலைநிகழ்ச்சியும் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற வுள்ளது.(ந-51)

# குரு மாற்றம் உங்களுக்கு எப்படி?

## 19-09-2005 முதல் 20-10-2006 வரை



## கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

அன்பார்ந்த கடக இராசி வாசகர்களே! எதிலும் உறுதியுடன் செயல்படும் உங்களுக்கு 27-06-2005 முதல் ஏழரைச் சனியில் ஜென்மச் சனி நடைபெறுவதாலும் குருபகவான் சுகஸ்தானமான 4ஆம் வீட்டில் 19-09-2005 முதல் சஞ்சாரம் செய்ய உள்ளதாலும் உங்களின சங்கடங்கள் தொடர்ந்தபடி இருக்கும். பொருளாதார ரீதியாக கடுமையான நெருக்கடியினை எதிர்கொள்ள நேரிடும். பிரகஸ்பதியான குரு பகவான் 4 இல் சஞ்சரிப்பதன் மூலம் உங்களுக்கு அலைச்சல், டென்ஷன், மனநிம்மதி இல்லாத நிலை, அசையும் - அசையாச் சொத்துக்களின மூலம் செலவுகள் ஆகியன உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்குக் கடந்த காலத்தில் நிலவிய தடைகள் சற்று விலகும் என்றாலும் பெரிய மாற்றங்கள் ஏதும் ஏறபடாது. ஏழரைச் சனியில் ஜென்மச் சனி 4-8-2007 முடிய நடைபெற உள்ளதால் கடன்கள் அதிகமாகும். சிலருக்கு நெருங்கிய உறவினர்களை இழக்க நேரிடும். தொழில், பொருளாதார ரீதியாகவும், உற்றார், உறவினர் மூலமாகவும் உங்களுக்கு எதிர்பாராத சங்கடங்கள் ஏற்படும். புத்திர வழியில அளவுக்கு மீறிய மனக் கவலைகள் உண்டாகும். வரும் நாள்களில் நீங்கள் மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டால் உங்களுக்கு ஏற்பட உள்ள சங்கடங்களை எளிதில் எதிர்கொண்டு கெடுபலன்களைக் குறைத்துக்கொள்ளலாம்.

### ஆரோக்கியம்

உடல்நலம் சிறப்பாக இருககாது. நீண்ட நாள்களாக, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இக்காலத்தில் அதிக மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மிகவும் எச்சரிக்கையாக இருபபது அவசியமாகும். சிலருக்கு திடீரென உடல்நலக்குறைவு உண்டாகக்கூடும். மனைவி, புத்திரர்களின் வழியிலும் உடல் சோர்வும் ஏதேனும் சில தொல்லைகளும் இருந்தபடியே இருக்கும். தொடர்ந்து தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலம் சற்று ஆறுதலை அடைவீர்கள். குழந்தைப் பாக்கியம் அமைவதில் இடையூறுகள் உண்டாகும்.

### செல்வம், செல்வாக்கு

பொருளாதார நிலையில் பணப் பற்றாக்குறையும் பண முடக்கமும் உண்டாகும். தேவையில்லாத வீண் சிக்கல்களில் சிக்கிக் கொள்வீர்கள். எதிலும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செயல்படுவது மிகவும் உத்தமம். யாருககும பெரும் தொகை கடன் தருவதோ, வாக்குறுதி தருவதோ கூடாது. நாணயக் குறைவு ஏற்பட்டு கொடுத்த வார்த்தையைக் காப்பாற்ற இயலாத நிலை ஏற்படும். கொடுத்த பணத்தை உடனடியாக வாங்க இயலாத நிலை ஏற்படும். எதையும் ஆற அமர யோசித்துச செய்வது நல்லது.

### குடும்பச் சூழ்நிலை

குடும்ப வாழ்வில் மனக்குழப்பங்கள் அதிகமாகும். கணவன் - மனைவி எதற்கெடுத்தாலும் சண்டையிட்டுக் கொள்ள நேரும். குடும்பச் சூழ்நிலையில் பணத்தட்டுப்பாடு அதிகமாகும். கடன்களும் தொல்லை தரும். சிலர் நவீனப் பொருள்களை விற்று விட நேரும். புத்திரர்கள் மூலம் கல்விச் செலவுகளும் வீண் செலவுகளும் அதிகமாகும். ஸ்திரச் சொத்துக்களின் மேல் அடிக்கடி புதுப்புது செலவுகளைச் சந்திப்பீர்கள். திருமண சுபகாரியத்தில தடை ஏற்படும். திருப்திகரமாக எதுவும் அமையாது.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உங்கள் வேலையில் அதிகமான உழைப்பினைச் செய்ய நேரிடும். உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவீர்கள். பதவி உயர்வும் ஊதிய உயர்வும் எதிர்பார்த்தபடி உங்களுக்கு அமையாது. இடமாற்றம் காரணமாக தெரியாத ஊரில் சென்று அலைய நேரிடும். உடனுள்ள ஊழியர்களின் கவனக் குறைவுக்கு நீங்கள் பொறுப்பேறக நேரிடும். எதைச் சொன்னாலும் விரோத மனப்பான்மையுடன் செயல்படுவார்கள. புதிய வேலை வாய்ப்புகள் தற்போது அமையாது. நண்பர்களின் உதவி கிட்டாது. கடுமையாக உழைக்க நேரிடும்.

### தொழிலதிபர்களுக்கு

தொழில் ரீதியாக நீங்கள போட்டிருந்த திட்டங்களால் வீண் விரயமும காலம் கடக்கும நிலையும் உண்டாகும். பலர் தொழிலை மாற்றவும் எண்ணுவீர்கள். நண்பர்களால் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகி அவர்களின் கோபத்திற்கு மேலும் ஆளாக நேரிடும். வியாபாரத்தில் போட்டியும், பொறாமையும் அதிகமாகும். பொருள் தேக்கமும் கொள்முதலில் ஏமாற்றப்படவும் நேரிடும். எதையும் யோசித்துச் செயல்படுவது நல்லது.

### மங்கையருக்கு

குடும்ப வாழ்வில் மனநிம்மதி இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் முழுக் கவனம் செலுத்துவது அவசியம். கவலைகளும் வேதனையும குடிகொள்ளும். அதனால் மேலும் சோர்வு அடைவீர்கள். கணவன் - மனைவியிடையே பிரச்சினைகள் உருவாக புத்திரர்களும், உறவினர்களும் காரணமாக அமைவார்கள். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு வேலைப்பளுவும் அதிகமான டென்ஷனும் அலைச்சலும் உண்டாகும்.

### கல்விநிலை

மாணவ மாணவிகளின் கல்வியில் மிகவும மந்தமான நிலையால், கடினமாக உழைத்தால் மட்டுமே சிறு சிறு அனுகூலப் பலனை அடைவீர்கள். அலட்சியமாக வீண் அரட்டையில் காலத்தைக் கழிக்காமல் இருந்தால மட்டுமே உங்களுக்குப் படிப்படியாக உயர்வு ஏற்படும். மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெறுவதில் இடையூறுகள் ஏற்படும்.

### கலைஞர்களுக்கு

சிறப்பான வாய்ப்புகளைக் கை நழுவ விட்டு விடுவீர்கள். ஒப்புக்கொண்ட வாய்ப்புகளில் சோர்வாக ஈடுபட்டு காலதாமதப்படுத்தி தயாரிப்பாளர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். இரசிகர்களின் ஆதரவுகள் குறையும். இசை, பாடல், நாடகத் துறையினருக்கு போதிய வாய்ப்புகள் கிடைக்க காலதாமதம் உண்டாகும். தன வரவுகளில மந்தமான நிலை காணப்படும். வெளியூர்ப் பயணங்களால் அதிக அலைச்சலும் உடல் சோர்வும் காணப்படும்.

### உழவர்களுக்கு

முதுகெலும்பு உடையப் பாடுபட்டாலும் பட்ட பாட்டுக்கேற்ற பயனை அடைய முடியவில்லையே என ஏங்குவீர்கள். நீர் வரத்தில் போதிய அளவினைப் பெற முடியாது. மண் புழுக்கள் மற்ற பூச்சிகள் மடிவதால் நில வளம் பாதிக்கும். கால்நடை ஜீவன்களுக்கு நோய்கள் தோன்றும். கவனமாகப் பராமரிக்க வேண்டியது அவசியம்.

### இளைஞர்களுக்கு

தற்போது உங்களை யாரும் புரிந்து கொள்ளமாட்டார்கள். எது செய்தாலும் அதைக் குற்றமாகவே பார்ப்பார்கள். நல்லதே செய்தாலும் அது பொல்லாப்பை உண்டாக்கும். பலமுறை அலைய நேரிட்டாலும் வீணாக அலைக்கழிக்கப்படுவீர்களே தவிர பலனிராது. காலம் கனியும் வரை காத்திருங்கள்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

உங்களுக்கு இக்காலத்தில் சோதனையான பலன்களையே கொடுக்கும். உடல் நலத்தில் முழுக்கவனம் செலுத்த வேண்டும. மருத்துவச் செலவுகள் கூடுதலாகும். மனைவிக்குக் கர்ப்பக் கோளாறுகள், மாதவிடாய்க் கோளாறுகள் ஏற்படும். புத்திரர்களின் வழியில மனச் சஞ்சலமும், மருத்துவச் செலவும் உண்டாகும். மனம் ஒரு நிலையில இல்லாமல் அலைபாய்ந்து குழம்பும. கணவன் - மனைவியிடையே தேவையற்ற சண்டை, சச்சரவுகள் ஏற்படும. பொருளாதார நிலையில் வரவேண்டிய பணம் தடைபடும். ஸ்திர சொத்துக்களை விற்க நேரிடலாம். சிலர் தொழில், வியாபார நிலையில் மிகவும் மந்தமான நிலையையும் நலிவையும் சந்திக்க நேரிடும். உத்தியோக நிலையில உயர் அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். அதிரடியாக ஏற்படும் மாற்றலால் மிகுந்த அலைச்சல் உண்டாகும். மாணவர்களின் கல்வியில் ஏற்றம் இருக்காது. கொடுக்கல், வாங்கலில் அதிகமான சிக்கல் ஏற்படும். எதிலும் மிகவும் உஷாராகச் செயல்பட வேண்டும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

பிறருக்குக் கொடுததைக் கேட்கப் போனால் வீண் விரோதத்தில் கொண்டு விடும். கொடுக்காமலேயே கெட்ட பெயர் எடுப்பது மேல் என்ற எண்ணம் தோன்றும். கொடுக்கல், வாங்கலின் மூலம் வம்பு, வழக்குகளிலும் ஈடுபட நேரிடும். பொருள் வரவில் தடையும், அதிக செலவுகளையும் ஏற்படுத்தும் காலமாகும். மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். உடல் ஆரோக்கியக் குறைவு மட்டுமன்றி எதையோ பறிகொடுத்தது போன்ற மனச்சோர்வும் உண்டாகும். மருத்துவச் செலவுகளையும் அதிகம் ஏற்படுத்தும். கணவன் - மனைவியிடையே உறவில் அடிக்கடி சண்டை, சச்சரவுகள் தோன்றும். குடும்பத்திலும் அமைதியான நிலை இருக்காது. எந்த ஒரு முயற்சியும் தடைப்படும். நாளைக்கு கண்டிப்பாக கிடைக்கும் என்ற எண்ணத்தில், இன்று இருப்பதை இழந்துவிடுதல் கூடாது. தொழில், வியாபாரமும் முன்னேற்றத்தை அடையாமல் இலாபக் குறைவு உண்டாக்கும். உத்தியோக நிலையில எதிர்பாராத இடமாற்றமும் அலைச்சலும உண்டாகி மனமும் உடலும் சோர்வடையும். திருமண சுபகாரியம் தடைபடும். மாணவர்களின் கல்வி தடைபடும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

39.ம/702 திரு.கவிரியேல் குருசுமுத்து
40.ம/711 திரு.சின்னையா மயில்வாகனம்
41.ம/737 திருமதி.புனிதவதி கந்தையா
42.ம/776 திருமதி.பாஞ்சாலி குருநாதன்

**மன்னார்உதவி அரச அதிபர் பிரிவு**
**மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.ம/6 திரு.யோசேப் பெனடிற்
2.ம/8 திரு.கந்தையா சிவபாதசுந்தரம்
3.ம/11 திரு.கார்த்திகேசு கனகரத்தினம்
4.ம/46 திரு.பொன்னு நாகராசா
5.ம/77 திரு.பூபாலசிங்கம் செல்வநாயகம்
6.ம/101 திருமதி.தர்மராணி துளசிதாஸ்
7.ம/112 திரு.செல்வநாயகம் செல்வராசா
8.ம/121 திரு.சின்னப்பு சுப்பிரமணியம்
9.ம/123 திரு.மயில்வாகனம் நவரெத்தினம்
10.ம/153 திருமதி.சரோஜினிதேவி பற்குணராசா
11.ம/178 திரு.அகஸ்ரின் லூயிஸ்
12.ம/191 திரு.மார்க்கண்டு சிவலிங்கம்
13.ம/235 திரு.சுவாந்தகுருஸ் அந்தோனி
14.ம/253 திரு.அந்தோனி கிறகோரிகுருஸ்
15.ம/262 திரு.காசிநாதர் கார்த்தியேசு
16.ம/279 திரு.நல்லையா சச்சிதானந்தம்
17.ம/280 திரு.நவரத்தினம் குலசேகரம்
18.ம/312 திரு.யோசப் லோகநாதன்
19.ம/315 திரு.பொன்னுத்துரை யேசுராசா
20.ம/338 திரு.சூசையப்பு ஸ்ரான்லி லியோன்
21.ம/375 திரு.சூசைப்பிள்ளை திருநாவுக்கரசு
22.ம/392 திரு.சின்னையா தவராசசிங்கம்
23.ம/429 திரு.சுவாந்து செபஸ்தியான்
24.ம/455 திரு.செபமாலை அந்தோனிப்பிள்ளை
25.ம/472 திரு.மரிசலின் ஜோஜ்குமார்
26.ம/480 திரு.குமாரவேல் ஆனந்தன்
27.ம/496 திரு.சுவாணி சந்தான்
28.ம/501 திரு.கபிரியன் அந்தோனிஜயா
29.ம/523 திரு.சீமான் அந்தோனிமுத்து
30.ம/567 திரு.தாமோதரம்பிள்ளை தருமலிங்கம்
31.ம/569 திரு.சந்திரசேகரம் இராசசிங்கம்
32.ம/570 திரு.அந்தோனிமுறாள் ஆசீர்வாதம்
33.ம/590 திரு.பிலிப்பு ஜெயசீலன்டபரோ
34.ம/596 திரு.சூசை சந்தியோகுசம்பாய்வ
35.ம/612 திரு.மாதடிமை சூசை
36.ம/724 திருமதி.ராஜலட்சுமி தட்சணாமூர்த்திசர்மா

**முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவு**
**முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-**

1.மு/73 திரு.சின்னத்துரை தாமோதரம்பிள்ளை
2.மு/79 திருமதி.விஜயம் விக்னேஸ்வரமூர்த்தி
3.மு/91 திரு.முத்தையா சுப்பிரமணியம்
4.மு/93 திரு.விஸ்வநாதன் ருத்திராவிஜயநாதன்
5.மு/118 திரு.பீமுத்து பரமநாதன்
6.மு/135 திரு.பீதாம்பரம் நித்தியானந்தசிவம்
7.மு/152 திரு.தம்பியையா வேலுப்பிள்ளை

(தொடரும்)

# அமெ.வை தொடர்ந்து ஜப்பானை தாக்கிய கொடிய சூறாவளி!

## கடும் மழை, நிலச்சரிவு; 1 இலட்சம் பேர் பாதிப்பு; மீட்புப் பணிகள் தொடர்கின்றன

(டோக்கியோ)

அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் பகுதியைத் தனது கோரத்தாண்டவத்தால் சூறையாடிய கொடிய சூறாவளி நேற்றுமுன தினம் ஜப்பானைத் தாக்கியது. கடலோரப் பகுதியில் வெள்ளம் புகுந்ததால் இலட்சக் கணககானோர் வீடுகளை இழந்து தவிக் கின்றனர்.

கடந்த வாரம் அமெரிக்காவில் வீசிய கத்ரினா சூறாவளியால் கடலோரப் பகுதி களான நியூ ஆர்லியன்ஸ், லூசியானா ஆகிய பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட டன. சுமார் 10,000 பேர் உயிரிழந்தனர். மேலும் இலட்சக்கணக்கானோர் வீடுகளை யும், உடமைகளையும் இழந்து தவித்தனர். அந்தச் சோகச்சுவடுகள் மறைவதறகுள் ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் திடீரென சூறாவளிக் காற்று தாக் கியதால், கடலோரப் பகுதிகளில் வெள்ளம் புகுந்தது.

இதனால் அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக் குள் வெள்ளம் புகுந்தது. இந்தச் சூறாவளிக காற்றால் ஹியூசோ தீவு மோசமாக பாதிக கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் ஒரு இலட்சம பேர் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப் பான இடத்திற்கு சென்றனா. மேலும அங்கு தொடர் மழை பெய்து வருவதால் சில் இடங் களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலச்சரிவில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சூறாவளி யால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின் றன.

சூறாவளியுடன் கடும் மழையும் பெய்து வருவதால் ஜப்பானின் பல முக்கிய விமா னத்தளங்களில் நேற்றுமுன்தினம் விமானங் கள் நிறுத்திவைக்கப்பட்டன. இதனால் ஏராள மான பயணிகள் விமான நிலையத்திலேயே தங்கவைக்கப்பட்டனர். (ற)

## பட்டினியால் வாடும் பென்குயின்கள்



அவுஸ்திரேலியாவில் கோலராய் பகு தியில் உள்ள பென்குயின் பறவைகள் புல போதிய உணவு இன்றித் தவிக்கின்றன. அந்த அபூர்வ இன பென்குயின் பறவை கள் இறந்துவிடும் அபாயமும் ஏற்பட்டுள் ளது.

இதைத் தொடர்ந்து சிட்னியில் உள்ள கடல்வாழ் உயிரின பாதுகாப்பு அதிகாரிகள் அந்தப் பென்குயின் பறவைக் குஞ்சுக ளைப் பிடித்து உணவு, சிகிச்சை அளித்து மீண்டும் கடலுக்குள் விட்டு வருகிறார் கள். (ற)

# அப்துல் கலாம் - ரொனி பிளேயர் சந்திப்பு



(புதுடில்லி)

இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் தலைமை யில் புதுடில்லி சென்றுள்ள ஐரோப்பிய கூட்டமைப்பு குழு ஜனாதிபதி அப்துல் கலாமை நேற்றுமுன்தினம் சந்தித்துப பேசியது.

30 நிமிடம் நீடித்த இந்தச சந்திப்பின் போது எரிசக்தி துறையில் ஒத்துழைப்பது குறி த்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் காங்கிரஸ் தலை வர் சோனியாவை பிரதமர் ரொனி பிளேயர் சந்தித்துப் பேசினார். வெளியுறவு அமைச சர் நட்வர் சிங் உடன் இருந் தார்.

இதற்கிடையில், சிம்லா வல் நேற்று ரொனி பிளேயர் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசுவதாக இருந்த கூட்டம் மோசமான வானிலை காரணமாக ரத்துச் செய்யப்பட்டது. (ற)

# மீண்டும் குண்டுவெடிக்கும் அபாயம்! பங்களாதேஷில் பாதுகாப்பு அதிகரிப்பு

(டோக்கியோ)

பங்களாதேஷில் நடந்த தொடர் குண்டு வெடிப்பை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற் பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குண்டு வெடிப்புச் சம்பவம் மீண்டும் நடைபெறாமல தடுக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக கையில் நேற்றுமுன்தினம் 25 பேர் கைதுசெய் யப்பட்டனர்.

பங்களாதேஷில் கடந்த ஆகஸ்ட் 17 ஆம் திகதி தொடர் குண்டுவெடிப்பு நடந் தது. மொத்தம் உள்ள 64 மாவட்டங்களில், ஒரு மாவட்டத்தைத் தவிர அனைத்திலும் குண்டுகள் வெடித்தன. 500க்கும் மேற்பட்ட இடங்களில் நடந்த இந்தத் தொடர் குண்டு வெடிப்பு வங்கதேசத்தையே அதிர்ச்சிக்குள்ளா கியது. இச்சம்பவத்தில் இருவர் உயிரிழந தனர். 100பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பு நடைபெற்ற இடங்களில் தடைசெய்யப்பட்ட ஜமாத் -உல் -முஜாகிதீன் என்ற தீவிரவாத இயக்கத்தின் துண்டுப் பிர சுரங்கள் கிடந்தன. இதைத் தொடர்ந்து அந்த இயக்கத்தைச் சேர்ந்த 200க்கும் மேற் பட்டோரை வங்கதேச பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனா.

இந்நிலையில், குண்டுவெடிப்பு சம்ப வங்கள் மீண்டும் நடக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அப்படி நடந்துவிடாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக் கபட்டு வருகின்றன. பொலிஸார் வீடு வீடா கச் சென்று சோதனையில் ஈடுபட்டுள்ளனர். விமானம் மற்றும் ரயில்வே நிலையங்களில் மோப்ப நாய்கள், மெட்டல் டிடெக்டர்கள் கொண்டு தீவிர சோதனை நடத்தப்படுகிறது. சந்தேகத்தின் அடிப்படையில் 25 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

பங்களாதேஷ் பொலிஸ் வட்டாரங்கள் இது குறித்து கூறுகையில்,

குண்டுவெடிப்பில் தொடர்புடைய ஜமாத் - உல்-முஜாகிதீன் இயக்கத்தைச் சேர்ந்த 200 பேரை ஏற்கனவே கைது செய்துள்ளோம் தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு இடதுசாரி தீவிர்வாத அமைப்புகள் உதவி செய்துள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் மீண் டும் நடைபெறாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். ஹோட்டல்கள் மற்றும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்படட சோதனையில் சந்தேகத்திற்கிடமான 25 பேரை கைது செய்தோம். விசாரணைக்குப் பின் 17 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்றனர். (ற)

### 11 மாதம் தீவிரவாதிகள் பிடியிலிருந்த

# அமெரிக்க பணயக் கைதி கூட்டுப்படையினரால் மீட்பு

(பக்தாத்)

ஈராக்கில் கடந்த 11 மாதங்களாக தீவிர வாதிகளின் பிடியில் இருந்த அமெரிக்க பணயக் கைதியை அதிரடி சோதனை நடத்தி கூட்டுப்படையினர் மீட்டனர்.

ஈராக்கில் மறுசீரமைப்பு பணிகளில் ஈடு பட்டுவரும் வெளிநாட்டவர்களை தீவிரவாதி கள் கடத்திச் சென்று விடுகிறார்கள். கடத் தபபட்ட சில பணயக் கைதிகளை தலை துண்டித்தும், துப்பாக்கியால் சுட்டும் தீவிர வாதிகள் கொலை செய்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பக்தாத் அருகே உள்ள மன்சூர் பகுதியிலிருந்து அமெரிக்கக் காண்ட்ராக்டர் ஒருவரைத் தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத் திச் சென்றுவிடடனர். கடத்தப்பட்ட அந்த காண்ட்ராக்டர் பெயர் ராய் ஹாலம்ஸ் (வயது57).


அந்த காண்ட்ராக்டரின் கதி என்ன? அவர் கொலை செய்யப்பட்டாரா? அல்லது இரக சிய இடத்தில் சிறை வைக்கப்பட்டுள் ளாரா? என்பது மர்மமாக இருந்தது.

இந்த நிலையில், ராய்ஹாலம்ஸ் பக்தாத் நகரில் இருந்து 15 மைல் தொலைவில் ஒரு பணணை வீட்டில் சிறைவைக்கப்பட்டு இருப பதாக அமெரிக்க இராணுவத்துக்கும், ஈராக் பொலிஸாருக்கும் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து கூட்டுப்படையினா அந்தப் பண்ணை வீட்டில் அதிரடி சோதனை நடத்தி காண்ட்ராக்டரை விடுவித்தனர். இந்த அதிரடிச் சோதனையின் போது தீவிரவாதி கள் எவரும் அங்கு இல்லை என்பதால் மோதல எதுவும் ஏற்படவில்லை எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ற)

## WORLD NEWS உலக தரிசனம்

# ஈராக் எண்ணெய்க்கு உணவு திட்டம் கொபி அனான் மீது குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

ஈராக் மக்களுக்கு பெட்ரோலுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் உணவு தானியம் சப்ளைசெய்ததில் நடந்த குளறு படிக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் தான் பொறுப்பு என்று விசாரணை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குவைத் மீது ஈராக் படையெடுத்த தைத் தொடர்ந்து அந்த நாட்டின் மீது ஐ.நா. பொருளாதார தடை விதித்தது.

இதனால் ஈராக்கில் உணவு, மருந்து, உடை போன்ற அத்தியாவசிய பொருட்க ளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் அப்பாவி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். உயிர் காக்கும் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற் பட்டதால் குழந்தைகள் உட்பட ஏராள மானவர்கள் இறந்தனர்.

அதனால் பொருளாதாரத் தடையை ஓரளவுக்கு விலக்கிக் கொள்ள ஐ.நா.சபை முன்வந்தது. ஐ.நா.சபை மேற்பார்வையில் ஈராக்கில் கிடைக்கும் கச்சா எண்ணெய்க்கு பதில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட் க ள் வாங்கிக் கொள்ள ஒரு ஏற்பாடு செய் யப்பட்டது.

ஆனால் இந்தத் திட்டத்தில் பெரும் ஊழல் நடந்ததாக குற்றச் சாட்டு எழுந்தது. ஐ.நா. பொதுச செயலாளர் கொபி அனானின் மகன் கோஜா மீது குற்றச்சாட்டு கூறப்பட் டது. அது பற்றி எனக்குத் தெரியாது என்று கொபி அனான் மறுத்தார்.

இது பற்றி விசாரிக்க அமெரிக்க புலனாய் வுத்துறை தலைவர் பால்வால்கர் தலைமை யில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு விசா ரணை நடந்தது. அந்த கமிட்டி அறிக்கை நேற்றுமுன்தினம் ஐ.நா.பாதுகாப்பு சபை யில் ஒப்படைக்கப்பட்டது. அந்த அறிக்கை யில்,

கச்சா எண்ணெய்க்கு உணவு திட்டத் தில் கொபி அனான் நேரிடையாக தவறு செய்ய வில்லை. ஆனால் நிர்வாக குளறு படிக்கு அவர் தான் பொறுப்பு என்று கூறப் பட்டுள்ளது. (ற)

# ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கு உத்தரப்பிரதேசத்தில் 500 பேர் பலி!

(கோரக்பூர்)

உத்தரபிரதேசம் கோரக்பூர் பகுதியில ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கு இலக் காகி (ஜப்பானிஸ் என்சபாலிடிஸ்) குழந்தை கள் உட்பட 500 பேருக்கு மேல் இறந்துள் ளனர்.

அந்தப் பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் தடுப்பு மருந்து தெளிக்க ஏற்பாடுகள் செய யப்பட்டுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள ரேப ரேலி தொகுதியில் இருந்து சோனியா காந்தி, மக்களவைக்கு தேர்ந்து எடுக்கப் பட்டார். அந்தத் தொகுதியில் 2 நாள் பய ணம் செய்து மக்களை சோனியா சந்தித்தா. கடந்த செவ்வாய்க்கிழமை சோனியாவின் பயணம முடிந்தது. ஆனால் தனது தொகு தியைச் சேர்ந்த கோரக்பூருக்கு சோனியா போகவில்லை. அந்தக் குறையைப் போக்கும் வகையில் சோனியா காந்தி மகன் ராகுல் காந்தி எம்.பி நேற்றுமுன்தினம் அங்கு சென்றார்.

கோரக்பூர் பகுதியில் மூளைக்காய்சச லுக்கு 500 பேருக்கு மேல் இறந்ததை அறிந்து ராகுல் காந்தி தனது கவலையை வெளியிட்டார். "அந்த நோய் மேலும் பரவாது தடுக்க கோரக்பூர் பகுதியில் ஹெலி கொப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப் படும். அதற்காக அகில இந்திய காங்கிரஸ கமிட்டி ஒரு ஹெலிகொப்டருக்கு ஏற்பாடு செய்யும்" என்று ராகுல் காந்தி கூறினார்.

அந்த நகரில் உள்ள பாபா ராகவ் தாஸ மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ள மூளைக்காய்ச்சல் நோயா ளிகளை ராகுல் காந்தி சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

பிறகு அவர் நிருபர்களிடம் பேசுகையல், மூளைக்காய்ச்சல் நிலைமை மோசமாக உள்ளது. டாக்டர்கள் போராடி வருகிறார்கள்.

75 இலட்சம் தடுப்பு ஊசிகளை இறக்கு மதி செய்ய மத்திய அரசு முட்டுக்கட்டை போடுவதாக உ.பி.முதலமைச்சர் கூறிய குற்றச்சாட்டு பற்றி கருத்துக் கூறவும் பதில் குற்றச்சாட்டு கூறவும் இது நேரம் இல்லை. மூளைக்காய்ச்சல நோயாளிகளை சந்தித்து அவர்கள் உடல் நிலை பற்றி விசாரிக்கவே வந்தேன் என்று ராகுல் காந்தி கூறினார். (ற)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 16

## 3.பணங்காய்ச்சிக் கடத்தல்

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், கொள்ளேகால் தாலுகாவில் உதவிக் கண்காணிப் பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கே. ஆர்கேஷ் கவுடா என்ற காவல்துறை அதிகாரி,1998 ஆம் ஆண்டு, வீரப்பனைத் தேடும் அதிரடிப்படையில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அங்கே அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்பு, கொஞ்சம் வித்தியாசமானது. வீரப்பன் யார்? அவனுடன் இருக்கிற கும்பல் எப்படிப்பட்டது? அவர்களை எப்படிப் பிடிக்கலாம்? எப்படிப் பிடிக்க முடியாது? நம் அதிரடிப் படை, அவனை நெருங்க முடியாமல் இருப்பதற்கு என்ன காரணங்கள்? நம் செயல்பாடுகளில் என்னென்ன மாற்றங்களைச் செய்தால், அவனைப் பிடிக்கிற சாத்தியங்கள் அதிகரிக்கும்? தற்போது அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வருங்காலத்திற்கு என்னென்ன திட்டங்கள் தீட்டி வைத்திருக்கிறான்? அவனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் யார் யார்?-இப்படி



ஏராளமான கேள்விகளை அவர் முன்வைத்து, இவற்றுக் கான பதில்களைத் தேடிக் கொண்டுவரும்படி பணிக்கப் பட்டார் ஆர்கேஷ்.

சுருக்கமாகச் சொல்வதானால், வீரப்பனைப்பற்றி, காவல்துறையின் கண்ணோட்டத்திலும், பொதுமக்களின பார்வையிலிருந்தும் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதவேண்டும்.

உற்சாகத்துடன் இந்தப் பணியை ஏற்றுச்செய்த ஆர் கேஷ், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கடின உழைப்புக் குப்பின், 2000ஆம் ஆண்டு, மே மாதம் தனது விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையின் பல பகுதிகள், சுவாரஸ்யமான வை. குறிப்பாக, இனிமேல், வீரப்பனின் திட்டங்கள் என்னென்னவாக இருக்கும் என்று ஆர்கேஷ் கணித்திருந்த பட்டியல், மிகவும் முக்கியமானது.

அந்தப் பட்டியலில், கீழ்க்கண்ட ஐந்து பிரபலங்கள், வீரப்பனால் கடத்தப்படுகிற அபாயம் உண்டு என்று குறிப் பிட்டிருந்தார் ஆர்கேஷ்.

1.பத்மபூஷண் டாக்டர் ராஜ்குமார் (திரைப்படப் பிரபலம்)
2.பத்மஸ்ரீ டாக்டர்.சுதர்ஸன்
3.திரு.ஹெச்.நாகப்பா (முன்னாள் அமைச்சர்)
4.திரு.ஜி.ராஜுகவுடா (எம்.எல்.ஏ.)
5.திரு.வாட்டாள் நாகராஜ்

இந்தப் பெயர்களை, வெறுமனே ஒன்று, இரண்டு என்று வரிசைப்படுத்திச் சொல்லிவிடாமல், இவர்களை இந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கான காரணங்களையும், வீரப்பன் இவர்களை எங்கே கடத்தக்கூடும் என்ற கணிப்பையும் கூட தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார் ஆர்கேஷ்.

மேற்சொன்ன பிரபலங்கள் எல்லோரும், வீரப்பனின் நடமாட்டம் அதிகமாக இருக்கக்கூடிய காட்டுப் பகுதிகளின் அருகே வசிக்கிறவர்கள் அல்லது அங்கே அடிக்கடி வந்து போகிறவர்கள்.

இந்தச் சிந்தனையின் அடிப்படையில், வீரப்பன் இவர்களைக் கடத்தலாம் என்று ஊகித்திருந் தார் ஆர்கேஷ். அதன்படி, இந்தப் பிரபலங்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று முடிவானது.

ஆர்கேஷ் தந்த பட்டியலில் முதல் இடத்தில் இருந்த ராஜ்குமார், கன்னடத்திரை உலகின் கலாசார அடையாளமாக மதிக்கப்படும் பிதாமகர். 'பத்மபூஷண்', 'தாதா சாகிப் பால்கே' போன்ற, நாட்டின் உயர்ந்த விருதுகளைப் பெற்றவர். இந்த எழுபது வயதிலும், அவர் கதாநாயகனாக நடித்த 'சப்தவேதி' என்ற திரைப்படம், கர்நாடக மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக ஓடியது என்றால், அவருடைய பிரபல்யத்தை நாம் ஊகித்துக் கொள்ளலாம். இப்போதும், கர்நாடகமெங்கும் அவருக்குத் 'தீவிர' ரசிகர்கள் உண்டு.

இப்படிப்பட்ட ஒரு பிரபலத்தைத்தான், வீரப்பன் முதலில் கடத்த முயற்சி செய்வான் என்று நினைத்த காவல்துறை, உடனடியாக, ராஜ்குமாரின் குடும்பத்தினரைத் தொடர்பு கொண்டது. விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி, 'பெரியவர் சொந்த ஊர்ப்பக்கம் சென்றால், எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுச் செல்லவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால், இந்த விஷயம் ராஜ்குமாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் வாய்விட்டுச் சிரித்தாராம். 'என்னைக் கடத்தினால் வீரப்பனுக்கு என்ன பெரிதாகக் கிடைத்து விடும்? வேண்டுமானால், நான் அணிந்திருக்கிற சட்டையையும் வேட்டியையும் அவனிடம் கழட்டிக் கொடுத்துவிட்டு, நான் ஊருக்குத் திரும்பி விடுவேன்' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார் அவர்.

ஏனோ, ராஜ்குமார் இந்த விஷயத்தின் தீவிரத்தை உணரவில்லை. புகழின் உச்சிக்குச் சென்ற பிறகும், எளிமையான வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டிருந்த அவருக்கு, தன்னைக் கடத்துவதன மூலம், வீரப்பனுக்கு என்ன பயன் கிடைக்கும் என்பது புரியவே இல்லை. ஆகவே, காவல்துறையின் எச்சரிக்கையை அவர் முற்றிலுமாக அலட்சியப்படுத்திவிட்டார்.

இந்த விஷயமெல்லாம் நடந்து ஒன்றிரண்டு மாதங்களுக்குப் பின், ராஜ்குமாரின் சொந்த ஊரான தொட்டகாஜனூரில் இருந்து, அவருக்கு ஒரு தகவல் வந்தது. தொட்டகாஜனூரில் ராஜ் குமார் ஒரு பெரிய வீடு கட்டிக்கொண்டிருந்தார். அங்கே தோண்டியிருந்த புதுக்கிணற்றில் இப்போது தண்ணீர் பொங்கிவருகிறது என்று அவருடைய பணியாளர்களில் ஒருவர் தொலைபேசியில தெரிவித்தார். இதைக் கேள்விப்பட்டதும், ராஜ்குமாருக்கு மிகுந்த உற்சாகமாகிவிட்டது. உடனடியாக அந்தக் கிணற்றைச் சென்று பார்க்கவேண்டும் என்று முடிவெடுத்தார் அவர். பயணத்துக்கான ஏற்பாடுகள் தொடங்கின.

தொட்டகாஜனூருக்கு ராஜ்குமார் செல்கிறார் என்று தெரிந்ததும், போலீஸில் ஒரு வார்த்தை சொல்லிவிடலாமே என்று அவருடைய உதவியாளர்களில் ஒருவர் தயக்கமாகக் கேட்டார்.

'வேண்டாம்' என்று உடனடியாக அதை மறுத்துவிட்டார் ராஜ்குமார். 'இது சுதந்திர நாடு. என்னுடைய சொந்த ஊருக்கு நான் போகிறேன். அதற்குப் போலீஸில் சொல்லி அனுமதி வாங்க வேண்டுமா? இது என்ன மடத்தனம்?

இப்படிச் சொன்ன ராஜ்குமார், திட்டமிட்டபடி, தனது 'திடீர்' பயணத்தைத் தொடங்கினார். பெங்களூரில் இருந்து, காரில் பயணம் செய்து, ஜூலை 29ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை தொட்ட காஜனூர் வந்தடைந்தார். சனிக்கிழமை முழுவதும், ராஜ்குமாருக்குப் பலவிதமான வேலைகள் இருந்தன. அவர் பார்த்துப் பார்த்துக் கட்டிக் கொண்டிருந்த புதிய வீட்டின் வளர்ச்சி, அவருக்குப் பரவசமான காட்சியாக இருந்தது.

தொட்டகாஜனூரில் ஏற்கனவே ராஜ்குமாருக்குச் சொந்தமான இன்னொரு வீடும் இருந்தது. அங்கேதான், இப்போது அவர் தங்கியிருந்தார். அவருடைய மனைவி பர்வதம்மா, மருமகன் கோவிந்தராஜு மற்றும் சில உறவினர்களும் அவர்களோடு இருந்தார்கள்.

அன்று இரவு, லேசாக மழை பெய்துகொண்டிருந்தது. ஆகவே, எல்லோரும் சீக்கிரமே சாப்பிட்டு விட்டார்கள். அந்த வீட்டில் தூங்குவதற்கு அவ்வளவாக இடம் போதாது என்பதால், கோவிந்த ராஜுவும் மற்ற சிலரும், புதுவீட்டில் படுத்துக்கொள்ளச் சென்றார்கள்.

அப்போதுதான், ஒரு கனமான குரல் அவர்களை வழிமறித்தது.

'ராஜ்குமார் எங்கே?' என்றது.

(தொடரும்)

## மீண்டும் வெளிநாட்டு வீதியோர வியாபாரிகள்

(யாழ்பாணம்)

சீனா, தாய்லாந்து,கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மணிக்கூட்டு வியாபாரிகளை மீண்டும் யாழ்ப்பாணத்தில் காணக்கூடியதாக உள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன் மேற்படி நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடாநாட்டில் கைக்கடிகார விற்பனையில் பரவலாக ஈடுபட்டதும், பின்னர் பல்வேறு காரணங்களுக்காக பொலிஸாரால் அவர்கள் குடாநாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மீண்டும் இவர்களது தெருவோர விற்பனை 'சூடுபிடிக்க' ஆரம்பித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைதடிப் பிள்ளையார் கோவில் மற்றும் நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆகிய கோவில்களில் இவ் வியாபாரிகளைக காணமுடிந்தது. இலங்கை-சீனாவிடையேயான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர் பான பேச்சுகள் அடிபடும் இந்நேரத்தில்,ஜனாதிபதி சந்திரிகாவின் சீன விஜயத்தை அடுத்து இச்சம்பவங்கள் நடைபெறுவதும் குறிப்பிடத் தக்கது. (து-124)

## தமிழ் மக்களின் போராட்டம் சிங்களவருக்கு எதிரானதல்ல

### -மட்டு.அரசியல்துறைப் பொறுப்பாளர்

(கொழும்பு)

தமிழ் மக்களின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல; அது தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இருந்து சென்ற சர்வமதக் குழுவினரை சந்தித்த இளந்திரையன, யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் அதற்கான முழுப் பொறுப்பை படையினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுவினருமே ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த சர்வமத குழுவில் தென்னிலங்கை மகாவலி மகாவிகாரை பீடா திபதி விஜிததேரர், இலங்கை திருச்சபையின் ஊவா மற்றும் கிழக்குப் பகுதி களின தலைவர் அருள்ராஜ் லூருட்ராஜ் கனகசபை ஆகியோர் சென்றிருந் தனர். (ந-9)

## அதிபர் தரம் 2 பதவியுயர்வு விபரம் வர்த்தமானியில்

(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அடுத்தமாதம் இறுதியளவில் நடாத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கடந்தமாதம் 31ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரி விக்கையில்,

பாடசாலை அதிபர்களை இரண்டாம் தரத்துக்கு பதவி உயர்த்துவதற் கான பரீட்சைகள் பற்றிய சகல விபரங்களும் இம் மாதம் 16ஆம் திகதி வெளி யிடப்படவிருக்கும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றார். (ந-7)

## சிறந்த ச.சமூக நிலையங்களை தெரிவு செய்வதற்கு போட்டி

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை ஊக்குவித்து சமூக மேம் பாடடையச் செய்யும் நோக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரம் தொடர் பான யாழ்.மாநகர சபை சிறந்த சனசமூக நிலையங்களைத் தெரிவு செய்வதற்கான போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

சொந்தக்காணி கட்டடம், பாலர் பாடசாலை, நூலக வசதி,பத்திரிகை விபரங்கள், தளபாடம், விளையாட்டு உபகரணங்கள், மைதானம், பொதுசன தொடர்புச் சேவைகள் செய்திருப்பின் விபரம்(நிலையத்தில் தகுந்த ஆதாரத்துடன் இருத்தல் அவசியம்), மாதாந்த கட்ட/ நிர்வாக/ அறிக்கை ஆகியன யாவும் பூரணமான நிலையில் உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர்/ செலாளர் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட போட்டியில் கலந்துகொள்ள விருப்பத்தினை தெரிவித்துக் கொள்ளு மாறு யாழ்.மாநகரசபையின் செயலாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள் ளார். (ந)

## உள்ளூராட்சி வார விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார விழா இம்மாதம் 16ஆம திகதி பிற்பகல் 2மணிக்கு நகரசபை செயலாளர் தலைமையில் நகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை, யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ,தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் வீமகாலிங்கம், வைத்திய கலாநிதி ச.அம்பிகை பாகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் மலர் வெளியீடு, உள்ளூராட்சி வார போட்டிகளில் வெற்றியீட்டியோர்க் கான பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (த-21)

## தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகள், கல்வி அலுவலகங்கள் ஆகிய வற்றில் சமயாசமய தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாணத்தில் 24 கல்விக் காரியாலங்க்ளிலிருந்து இது தொடர்பாக தகவல்கள் கோரப்பட்டுள்ளதாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார். (த-7)

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின் - குறள்

வலம்புரி

## பதவியைப் பிடிக்க பம்பரமாடுகிறார்கள்

இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுமே மாறி மாறி அரச யந்திரத்தை மாய்ந்து மாய்ந்து இழுத்து வருகிறது.

இவர்கள் ஆட்சி நிர்வாகம் இலங்கைத் தீவில் ஒன்றை விட ஒன்று எந்த வகையிலும் வேறு பட்டதாக இதுவரை இருந்ததில்லை.

சுருங்கக்கூறின் இவர்களின் ஆட்சி மோதகமும் கொழுக்கட்டையும்தான்.

கட்சிதான் ஆட்சியில் மாற்றமேதவிர, ஆட்சி ஒன்றுதான். இதற்கு பிரதான காரணம் கட்சிக்கென்றோ, நாட்டுநலனுக் கென்றோ, மக்கள் வாழ்வியலுக்கன்றோ இங்கு கொள்கைகள் இல்லை.

பதிலாக பதவியைப் பிடிப்பதற்கு சூழ்நிலைப் பொருத்தம் எப்படியிருக்கிறதோ அதற்கு ஏற்பவே கொள்கை அமையும் என்பதே இலங்கையின் அரசியல் வழமை.

இந்த வழமைதான் இப்போதும் ஆட்சியைப் பிடிக்க பாடாய்ப்படும் அரசியல்வாதிகளின் கொள்கையாய் உள்ளது.

ஆட்சி அமைத்தால் போதும். அதற்காக யாரோடும், எந்தக்கொள்கையோடும் இணங்கிப்போக அரசியல்வாதிகள் தயார் என்ற உண்மைநிலை அப்பட்டமாக வெளிப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

ஆட்சியைப் பிடிக்கவேண்டும். அதனை இலாபம் ஈட்டும் வகையில் நீட்டிச்செல்ல வேண்டும் இதுதான் தென்னிலங்கை அரசியல் களத்தில் அரங்கேறும் அரசியல் நாடகம். இது அன்று முதல் இன்று வரை தொடர்கிறது.

இலங்கையில் முதலாவது நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அன்று 'ஆட்சிக்காக எவருடனும் கூட்டு வைப்பேன்' என்று உரைத்தார்.

அதனையே நான்காவது நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் 'ஆட்சிக்காக எந்தப்பிசாசுடனும் கூட்டுச்சேருவேன்' என்று இறுமாப்புடன் முழங்கி ஜே.வி.பியை அரவணைத்து ஆட்சியில் ஏறினார்.பின்னர் அதனால் நன்கு பட்டறிவும் பெற்றார்.

இந்தப் பாரம்பரியத்திலேயே இப்பொழுதும் ஜனாதிபதி வேட்பாளர்கள் பதவியைப்பிடிக்க பம்பரம் ஆடுகிறார்கள் யார், எவர், எதைச்சொன்னாலும், என்ன நிபந்தனை விதித்தாலும் உடன்படிக்கையை உருவாக்கினாலும் எதற்கும் தலையாட்டி, சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

பதவிக்காக கும்புடு போடுவதும், விழுந்து நுழைவதும் இலங்கை அரசியலில் காணப்படும் கீழ்மையான விடயமாகும்.

பதவியென்பது மக்களுக்கு சேவைபுரிவதற்கானது. இதனை பெற்றுக்கொள்ள முனைபவர்கள் மக்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

அதற்குப் புறம்பாக வாக்குப்பலம் எங்கிருக்கின்றதென்பதை தெரிந்துகொண்டு, அவர்களின் நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு தமக்கென்ற எந்தக் கொள்கையுமற்று இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் வார்த்தைகளை மாற்றி வம்பு செய்வது அரசியல்வாதிகளின் ஜாலம். இந்த அற்ப ஜாலம் இப்பொழுது வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது.

ஆடுவோம் பாடுவோம், கூத்தடிப்போம், ஆட்சியைப்பிடிக்க என்பது போல பாசாங்கு அரசியலொன்று தென்னிலங்கை அரச களத்தில் சூடாக அரங்கேறி வருகிறது.

இந்த அரங்கில் இனவாதிகளும், மதவாதிகளும் கலையாட்டம் போட்டு ஆட்சிக்கு குழையடிக்கின்றனர். இந்த ஆட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் சுழன்று சுழன்று ஆடி அனைவருக்கும் வாக்குச்செப்பி உச்சாடனம் செய்து பதவிக்கதிரைக்கு குறிவைத்திருக்கின்றனர் என்பதே மறுதலிக்கமுடியாத உண்மையாகும்.

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீக்கம்;

# வெளியான செய்திகளுக்கு பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கைவிட வேண்டும் என்று தான் தெரிவித் ததாக வெளியான செய்திகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.



மஹிந்த ராஜபக்ஷ அலுவலகம் இது தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பான நிலையில் மாற்றம் எதுவும் இல்லை. ஆனால், அதில் சில விடயங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கவுள்ளதாக ஜே.வி.பி கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.

2002 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந் தத்தை முழுமையாக மீளமைத்தல் உட்பட 12 நிபந்தனை களுக்கு பிரதமர் இணங்கிய தாகவும் அக்கட்சி அறிவித்தது.

இந்நிலையில், நாங்கள் அப்படியான ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லையென்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எவருடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார். (ர-4)

# நாடுகளின் உட்கட்டமைப்புகள் 'கூகிள்' இணையத்தளத்தில்!

## இலங்கை உட்பட ஆசிய நாடுகள் அதிர்ச்சி

கூகிள் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கும் உலக நாடுகளின் உள்ளமைப்புகள் தொடர்பான விரிவான செய்மதி படங்கள் குறித்து இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளன.

இதுகுறித்து, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க தெரிவிக்கையில்,

அரச நிறுவனங்கள், கட்டடங்கள் தொடர்பான இச் செய்மதி படங்களை ஒருவர் இணையம் வழி பெறுவது என்பது கவலையளிப்பதாக உள்ளது. இருப்பினும் இது புதுயுகம். இத் தொழில்நுடப யுகத்தில் நாம் இதை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இணையம் சார்ந்த வாழ்க்கைமுறை இப்போது உருவாகி வருகிறது. குண்டுகள் தயாரிப்பு முதல் விமானங்களை உருவாக்குவது வரை இணையத்திலேயே இருக்கின்றன. இவற்றையும் இராணுவத் தரப்பினர் உள்வாங்கிக் கொண்டு அதை எதிர்கொள்வதறகான நடவடிக்கைகளை கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

இந்திய அரசு சார்பில் உத்தியோகபூர்வ கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இதுகுறித்து பேசிய பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர், இப்பிரச்சினை குறித்து இந்திய அரசு விவாதித்து வருகிறது. இதுபோன்ற தொழில்நுட்ப வளர்ச்சியை நாம் தடுக்க இயலாது. இந்த இணையத்தில் இந்திய அரச தலைவரின் இல்லம் உட்பட அனைத்தும் விரிவாக போடப்பட்டுள்ளது. அரசு தலைவர் இல்லத்தில் உள்ள ஒவ்வொரு மரங்களும கூட பதிவேற்றப்பட்டுள்ளது. எமது பாதுகாப்பு அமைப்புகள் இதுகுறித்து அவதானமாகவே உள்ளது. ஆனாலும் தொழில்நுட்ப வளர்ச்சியை எப்படித் தடுப்பது? என்றார்.

இச்செய்மதிப் படங்கள் குறித்து தாய்லாந்தும் தென் கொரியாவும் கடும் அதிருப்தியில் இருக்கின்றன.

தாய்லாந்து விமானப்படை பேச்சாளர் மேஜர் ஜெனரல் வீரசக் மனே-இன் கூறுகையில்,

இந்தப் படங்கள் வெளியிடப்படுவதைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலா பயணிகளை கவரும் நோக்கத்தில் இவை வெளியிடப்பட்டிருக்கக் கூடும் என்றார்.

அதேநேரத்தில், தாய்லாந்து இராணுவம் இப் பிரச்சினை குறித்து தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுடன் விவாதித்து வருவதாகவும், கூகிள் இணையத்தள நிறுவனத்திடம தமது அரசுக்கு இதுபோன்ற சேவையை அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தென்கொரிய அரச அதிகாரிகள் இப்படங்கள் குறித்து கூறுகையில், அமெரிக்காவிடம் தமது அரசின் கவலையை தெரியப்படுத்தியுள்ளது என்றனர்.தென்கொரிய அரச தலைவரின் இல்லம், இராணுவத் தளங்கள் உள்ளிட்டவை கூகிள் இணையத்தளத்தில் இருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

ஆனால் ஜப்பான் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டது.அவுஸ்திரேலிய பாதுகாப்புத்துறையினரும் இது போன்ற அச்சுறுத்தல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தனர்.

இருப்பினும், அவுஸ்திரேலிய அணுகுண்டு தொழில்நுட்பத்துறையினர் வெளியிட்ட அறிக்கையில் கூகிள் செய்மதிப் படங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முந்தியவை என்றும் இவை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது எனவும் விளக்கம் அளித்துள்ளனர். (ர-4)

# அனுசரணையாளர் பணியிலிருந்து நோர்வேயை விலக்கத் தேவையில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர் பணியிலிருந்து நோர்வேத் தரப்பினரை விலக்க வேண்டிய அவசியம் இல்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தற்பொழுதுள்ள நிலையில் சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர் பணியிலிருந்து நோர்வே விலக வேண்டிய தேவையில்லை எனினும், சமாதான முன்னெடுப்புக்களில் நோர்வே கடைப்பிடிக் கும் தந்திரோபாயங்களை மாற்றியமைக்க வேண்டுமெனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் சமாதான முயற்சிகளில் நோர்வேத் தரப்பினர் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுபடமுடியும். அத்துடன் இலங்கையில் சேவையாற்றிவரும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு நோர்வேயுடன் தொடர்புபடாமல் தனியானவொரு அமைப்பாக பக்கச் சார்பற்ற முறையில் செயற்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய ரவூப் ஹக்கீம், யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் அவ்வாறு தனியானதொரு அமைப்பாக செயற்படுவார்களாயின் அவர்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் தாம் வழங்கத் தயாராக விருப்பதாகவும் தெரிவித்தார்.



இனப்பிரச்சினை விவகாரத்தில ஐக்கிய நாடுகள் சபை நேரடியாகத் தலையிடாது நோர்வேத் தரப்பினருக்கு யோசனைகளையும், ஆதரவையும் வழங்கவேண்டுமெனவும் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ர-4)

# திருமலையில் துப்பாக்கிச் சூடு இரு தமிழ் இளைஞர்கள் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளிப் பரதேசத்தில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு தமிழ் இளைஞர்கள் காயம் அடைந்துள்ளனர்.

தமது காவல்நிலை மீது அந்த இளைஞர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பியோடிய போது இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக படையினர் தெரிவித்தனர்.

இரு இளைஞர்களும் சைக்கிளில் வந்து இத்தாக்குதலை நடத்தியதாகவும் இருவரையும் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்த படையினர், இரு இளைஞர்களும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் திருகோணமலையைச் சேர்ந்த அம்பலம் சிவஞானசுந்தரம, குருமூர்த்தி சரத்குமார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில்,மட்டக்களப்பு நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனியார் ஒருவரின் வீட்டின் மீது கைக்குண்டொன்று எறியப்பட்டதாகவும் எவரும் காயம் அடையவில்லை என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ர-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



சூரியன் ஒளி வீசுவதற்கும் நட்சத்திரங்கள் மின்னுவதற்கும், பூமி வளமும், அழகும் பெற்று விளங்குவதற்கும காரணம் நீயே. உனது அருளால் தான் எல்லாம் ஒன்றோடொன்று அன்புடனும் கவர்ச்சியுடனும் இருக்கின்றன. எல்லாவறறுக்குள்ளும் நீயே இருக்கிறாய். எல்லாம் நீயே. யாரை ஒதுக்குவது?யாரை ஏற்றுக்கொள்வது? எல்லாவறறிலும் உள்ள எல்லாமும் நீயேதான். இந்த ஞானம் உதித்தவுடன் மாயை தானாகவே விலகிவிடுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில அரசியல் கட்சிகள் இடையூறு

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் சிலவற்றின் இனவாதம், சமயக் கொள்கைகள் நாட்டை முன்னேற்றுவதற்கு இடையூறாக அமைவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு இடையூறாக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசினாலும் ஜே.வி.பி என்று கூறப்படுகின்ற அமைப்பினாலும் சுமார் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு உள்ளார்கள். எனது கணவரும் இவ்வாறே கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

(ச-8)

## ரணிலுக்கு ம.ம.மு.ஆதரவு

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மலையக மக்கள் முன்னணி ஆதரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் தலைமையில் நடைபெற்ற அக்கட்சியில் தேசிய சபைக் கூட்டத்தில் இது தொடர்பான முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

இது குறித்து இவ்வார இறுதியில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பை அவர் வெளியிடுவார் என கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன. (ச-4)

## விடுதலைப்புலி உறுப்பினர் நேற்று முகமாலையில் கைது

(முகமாலை)

முகமாலை சோதனைச் சாவடியில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

பளை நோக்கி பயணமான பேருந்து வண்டி முகமாலையில் வைத்து சோதனையிடப்பட்ட போது குறிப்பிட்ட நபரிடமிருந்து 22 தேசிய அடையாள அட்டைகள் 2 தபால் மூல அடையாள அட்டைகள் 2 விடுதலைப் புலிகளின் அடையாள அட்டைகள் 3 கடவுச் சீட்டுக்கள் இராணுவத்தினர் வழங்கும் பாஸ்கள் 11 மற்றும் மாவட்ட செயலாளரினால் வழங்கப்படும் 8 தற்காலிக அடையாள அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளுக்காக முகமாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-8,4)

## பொலிஸ்...

இளைஞர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் இனங்காணப்படவில்லை. இவரிடமிருந்து 9 மில்லி மீற்றர் ரக கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர் கருணா குழுவைச் சேர்ந்தவர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச-4:9)

## விமானத்தில் குண்டு...

சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் , நேற்றுப் பிற்பகல் 1.50மணியளவில் 404 பயணிகளுடன் ரியாத் நோக்கிப் புறப்படவிருந்த விமானத்தில் குண்டுவைக்கப்பட்டிருப்பதாக அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது. இதனையடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேலெழும்புவதற்கு தயாராகவிருந்த அவ்விமானத்தின் பிரதான பகுதிக்கு விமானத்தை உடனடியாக நிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது.

இதன் பின்னர் பயணிகள் விமானத்திலிருந்து அவசர அவசரமாக வெளியேற்றப்பட்ட போது சில பயணிகள் பயம் காரணமாக விமானத்திலிருந்து குதித்து தப்ப முயன்றனர் அதன்போது அவர்களுக்கு முறிவுக்காயங்கள் ஏற்பட்டதாகவும் விமானத்தின் வழுக்குப் பாதை உடைந்து விழுந்ததால் பெண் பிரயாணி உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

புரளியையடுத்து விமானம் சோதனையிடப்பட்டது. இறுதியில் இது வெறும் குண்டுப்புரளியே என்று இராணுவத்தினர் உறுதிப்படுத்தினர்

காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் இலங்கையிலிருந்து மத்திய கிழக்கிற்கு வேலை வாய்ப்புகளுக்காக செல்ல இருந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-4,8)

## நோர்வே அரசின்...

வெளியாகின. இது குறித்து நாம் கண்காணிப்புக்குழுவிடம் கேட்டோம். அவர்களும் அப்படியான ஒருசிலரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சந்தித்ததாக கூறினர்.

இக்குழுக்கள் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் இல்லையென்றும் தங்களது பாதுகாப்பில் இல்லையென்றும் சொல்லிவருகின்ற அரசாங்கத்திற்கு ஆதாரத்துடன் விளக்குவதற்காகவே இச்சந்திப்பை மேற்கொண்டதாகவும் கண்காணிப்புக் குழுத்தெரிவித்ததாக தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஆயுதக்குழுக்களை அரச தரப்பும் படைத்தரப்பும் ஒழுங்கமைத்து வைத்து இயங்கிக்கொண்டிருப்பது இப்போது உலகறிந்த உண்மையாக வெளிப்பட்டிருக்கின்றது.

இதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் கூட தகர்த்தெறியப்படக்கூடிய நிலைமைதான் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசு ஏற்றுக் கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை மீறி ஆயுதக்குழுக்களை மறைமுகமாக ஆதரித்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பது தெளிவாகியிருக்கின்றது என்றார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தற்போது கேள்விக்குறியான நிலைக்கு வந்துள்ளதால்தான் நேரடிச்சந்திப்பும் உறுதியான தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாக இருக்கிறது.

*ஜனாதிபதித் தேர்தல்*

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. ஏனெனில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதைச் செய்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

தமிழ் மக்களின் வாக்கு வங்கிகளைப் பெறுவதைவிட தமிழ்மக்களுக்கு எதிராக எப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்கிற இனவாத கருத்துக்களைத் தான் அண்மைக்காலமாக சிங்கள மக்களிடத்தில் அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

எங்கள் மக்கள் ஏற்கனவே தங்களது முடிவை மேற்கொண்டு விட்டார்கள். எங்கள் சொந்தத் தாயகத்தில் தன்னாட்சி உரிமையோடு வாழவேண்டுமென்பது எங்கள் மக்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற தீர்மானம் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

(ச-19.4)

# தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் மூன்று தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களிடமிருந்து 40 லட்ச ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள், பணம் மற்றும் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு ஆமர் வீதியில் நேற்று முன்தினம் காலை விசேட அதிரப் படையின் விசேட நடவடிக்கைகள் பிரிவினால் இம்மூவரும் கைது செய்யப்பட்டனர்.

ஓட்டோவில் வந்தபோது கைது செய்யப்பட்ட இம்மூவரிடமிருந்து 40 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின், 10லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணநோட்டுக்கள், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் கிரனேட்டொன்று இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

## பொங்குதமிழ் 2005 விளக்கக்கூட்டம்

பொங்குதமிழ் எழுச்சிப்பிரகடனம் 2005 தொடர்பான கலந்துரையாடல்களும் விளக்கப் பொதுக்கூட்டங்களும் யாழ்.பல் கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் நேற்று யாழ். தேசிய கல்வியற்கல்லூரியிலும் பாடசாலைகள் சிலவற்றிலும் மேற்கொள்ளப்பட்டது. இவ்விளக்கக் கூட்டங்கள் சகல தரப்பினரிடையேயும் மேற்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக சமூகத்தினர் தெரிவித்தனர். (இ)

## கண்காணிப்பு...

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் நடேசன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச்சேர்ந்த செல்வி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-19)

## பிரதமர்...

அமைச்சர்கள் அநுரா பண்டார நாயக்க, டக்ளஸ் தேவானந்தா, டினேஸ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நந்தன குணதிலக, விமல் வீரவன்ஸ ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் ஒப்பந்தம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கையெழுத்திடப்பட்டது.

(ச-4)


## கண்ணீர் அஞ்சலி



(நாகமுத்து பரராஜசிங்கம்)

புங்குடுதீவு மடத்துவெளி நுளைவாய் பிள்ளையார் ஆலயப் பொருளாளர் ப.கனகலிங்கம் அவர்களின் தந்தை நாகமுத்து பரராஜசிங்கம் (சொக்கர்) அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்
புங்குடுதீவு

ஆலய பரிபாலன
சபையினர்

(c1637)

## ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்

அடகு பொருட்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு!

நீங்கள் பெற்றுள்ள அடகு கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதனை மீண்டும் அறியத் தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருள்கள் மீட்க/ காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் 01/10/2005 சனிக்கிழமை ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

–முகாமையாளர்

(C1638)

DAY CLASS
A/L-2006
[கலை, வர்த்தகப் பிரிவுகள்]
ஆரம்பம்
செப்டெம்பர்-12 (திங்கள்)
காலை-8.30
D.M.I
JAFFNA
(C1636)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
கார்த்திக், ரோஜா,
ரம்பா,
விவேக் நடித்த
சந்தித்த வேளை
கா.நே: 11.00, 2.45, 6.00,(பு.நே)

றீகல்ஸ் / நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று முதல்
சத்தியராஜ், நமீதா, வடிவேல் நடிப்பில்
இங்கிலிஷ்காரன்
கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
புதிய வெளியீடு
09.09.2005 முதல்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டிஜெயா
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.